
உ

கண்ணகாதேவி துணை



# நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மன்

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

ஆவணித்திங்கள் 15ஆம் நாள் (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை

நாகர்கோவில்

அருள்மிகு

# பூர்வீக கண்ணகை அம்மன்



# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

**ஆவணித்திங்கள் 15ஆம் நாள் (31.08.2014)**

**ஞாயிற்றுக்கிழமை**

தலைப்பு : மஹறா கும்பாபிஷேக சிறப்பு மலர்

ஆசிரியர் : மலர்க்குழுவினர்

முகவரி : நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மன்

உரிமை : மலர்க்குழு

பதிப்பு : ஆவணி - 2014

வெளியீடு : நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மன்

பதிப்பு : கரிகணன் (தனியார்) நிறுவனம்
681, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# வாழ்த்துச் செய்தி

ஈழவளநாட்டின் வடபால் நாகர்கோவில் எனும் புண்ணியபதியில் நாகதம்பிரான் திருக்கோயில் அருகே வெண்மணற் குன்றின் மேல் நாவல் மரச்சோலையின் மத்தியில் கண்ணகி எனும் நாமம் கொண்டு விளங்கும் அன்னையே சிவசக்தியாகும்.

சிவசக்தியே ஞானமாகும். ஆகம ஞானத்தால் தான் அந்த சிவஞானத்தை அடைய முடியும். சிவபெருமான் தன் சக்தியைக் கொண்டே பஞ்ச கிருத்தியங்களையும் நடாத்துகிறார். அந்த சக்தியும் சிவபெருமானின் ஆக்ஞையை மேற்கொண்டவளாய் சிருஸ்டியாதி பஞ்ச கிருத்தியங்களையும் செய்கின்றாள். அப்படி பிரபஞ்சத்திற்குக் காரணமான சக்தியை லோகசேமத்தின் பொருட்டு ஆலயங்களில் இருக்கச் செய்தலே பிரதிஸ்டை எனும் மஹா கும்பாபிஷேகமாகும்.

அன்னையின் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும் இந்நன்நாளிலே சிலம்பு கொண்டு நீதி கேட்ட அன்னையின் சிறப்பினை எடுத்தியம்பும் வரலாற்று நூல் வெளிவருவதையிட்டு மனம் மகிழ்கின்றேன்.

இன்புனித மலரை ஆக்கும் ஆலய தர்மகர்த்தாவும் பூசக பரம்பரை வழித்தோன்றலுமாகிய வல்லிபுரநாதர் பத்மநாதன் அவர்களுக்கு என் நல் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னையை வழிபடும் அடியார்களுக்கும் தொண்டர்களுக்கும், உலகிலுள்ள அனைத்து அன்னை அடியார்களுக்கும் அருள் கிடைக்க எமது நல்லாசிகள்.

**க. சிவசண்முக குருக்கள்**
நாகதம்பிரான் உபாசகர்
கும்பாபிஷேக பிரதம குரு.

# வாழ்த்துச் செய்தி

"கற்பின் கனலேயாக்கி கவினுறு மதுரை தீய
கொற்றவன் புரண்டு வீய, குலமுறை அமைச்சர் சாய
செற்றமே உருவதாகி சிலம்பதை உடைத்து நீதி
சொற்றியே சோதியான தூய கண்ணகையே போற்றி"

அன்னையை வழிபாடு செய்தால் அனைத்து நலனும் கிடைக்கும். தாயாய் எப்பொருட்கும் இறைவியாய், அனைத்திற்கும் காரணியாகி, சைவ முழுமுதலாகிய சிவப்பரம் பொருளின் இடப்பாகமுற்ற சக்தியே உமையே கண்ணகியாக திருவவதாரம் செய்தார் என்றும் கூறுவர். சேர மன்னன் செங்குட்டுவனால் இலங்கை கஜபாகு மன்னன் மூலம் இலங்கைக்கு கண்ணகி வழிபாடு தொடங்கியதாக சரித்திரம் சொல்கிறது. வடமராட்சி கிழக்குப் பிரிவில் குடத்தனை, நாகர்கோவில், குடாரப்பு, செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி கிராமங்களில் கண்ணகியம்மன் கோவில் கொண்டு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வணங்கும் பத்தினி தெய்வமாகக் காட்சி தருகின்றார்.

சிலப்பதிகார நாயகியாகிய சிலம்புச் செல்வி, கண்ணகி தெய்வமாகி கண்ணகியம்மனாகி நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் வடபால் வெண்மணல் திடலின் நடுவே கோவில் கொண்டுள்ளார். இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுவதையிட்டு மிகவும் மனம் மகிழ்கின்றேன். சைவ ஒழுக்க விழுமியங்களைக் கட்டிக் காப்பாற்றி பழமையும், கலாசார நடைமுறைகளையும் பேணிவரும் பரம்பரை பூசாரி குடும்பத்தினால் பரிபாலிக்கப்பட்டு வரும் இவ் ஆலயத் தெய்வம் நாகர்கோவில் பகுதி மக்களால் " அம்மாளாச்சி" என்று நாவினால் அடிக்கடி சொல்வதைக் கேட்டிருக்கின்றேன்.

வருடந்தோறும் வைகாசி விசாக நட்சத்திரத்திற்கு முன்வரும் திங்கட்கிழமை அம்மனுக்குப் பொங்கல் விழா கொண்டாடுவதுடன் ஆலயத்தில் எட்டு நாட்களும் விரதமிருந்து குடாரப்பு வெற்றிவேற் புலவரால் பாடப்பட்ட ஏட்டுருவில் உள்ள கோவலன் கதை இசைப்பாடலைப் பாடி பொங்கலன்று குளிர்த்தி படித்து கொண்டாடுவது சிறப்பிற்குரிய விடயம் ஆகும். மேலும் இவ்வாலயத்திற்கு மிகவும் அருகாமையில் பூர்வீக

நாகதம்பிரான் ஆலயம் அமைந்துள்ளதால், அங்கு வரும் அடியவர்கள் அனைவரும் கண்ணகி அம்பாளையும் தரிசித்துச் செல்வதும், இரு ஆலயங்களும் ஒன்றோடொன்று தொடர்புள்ளமையும் தனிச்சிறப்பாகும்.

எம்பிராட்டியை வணங்கி வரும் அடியவர்கள் அனைவரும் வாழ்வாங்கு வாழவேண்டும் எனவும், கற்புடை செல்வியின் அருள் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் எனவும், அறத்தை உரைத்த தாயே அறமே வாழ அருள் செய்வாய் என வேண்டி கண்ணகி தாயவள் பாதாரவிந்தங்களைப் பணிந்து ஆலய கும்பாபிஷேக விழா சிறக்க வாழ்த்துகின்றேன். வணங்குகின்றேன்.

**ந. திருலிங்கநாதன்**
*பிரதேச செயலர்,*
*பிரதேச செயலகம்,*
*வடமராட்சி கிழக்கு.*

# நாகர்கோவில்
# அருள்மிகு
# கண்ணகை அம்மன் தேவஸ்தான
# மஹாகும்பாபிஷேகம் - 2014
# எஜமானின் செய்தி

எங்கும் பரிபூரணமாக நிறைந்து நின்று ஆன்மாக்களைக் காத்து ரட்சிக்கின்ற சிவபெருமானின் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் சக்தி ஒரு காலத்தில் கண்ணகி என்னும் திருவவதாரம் எடுத்து பூவுலகில் வாழ்ந்து தெய்வமாகி இலங்கையில் பல இடங்களில் கோயில் கொண்டருளியுள்ளார். அந்த வகையில் எம்முன்னோருக்கும் காட்சி கொடுத்து நாகர் கோவிலில் பூர்வீக நாதம்பிரான் ஆலயத்திற்கு வடபால் அமைந்துள்ள வெண்மணல் பிரதேசத்தில் கோவில் கொண்டருளினார். ஆரம்பகாலத்தில் மரவடியில் வைத்து வழிபட்டுவந்த எமது முன்னோர் எமது தந்தையாரின் காலத்தில் 1978 இல் கற்கோவிலில் அம்பாளைப் பிரதிஸ்டை செய்து வழிபட்டு வந்தனர். 2000 ஆம் ஆண்டு நாகர்கோவில் பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து சென்றதனைத் தொடர்ந்து 2009ஆம் ஆண்டு வரை ஆலயப் பூசைகள் எதுவும் நடைபெறாது இருந்த நிலையில் 2009ஆம் ஆண்டு தொடக்கம் திரும்பவும் பூசை, பொங்கல் விழா என்பன நடைபெற அம்பாளின் திருவருள் கிடைத்தது.

கோவிற் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையினைக் கண்டு கோவிலைப் புதிதாகக் கட்ட முயற்சியை மேற்கொண்ட எனது சகோதரன் திரு. வ. பத்மநாதனின் முயற்சிக்கு அம்பாளின் திருவருளும் நாகர் கோவில், குடாரப்பு, நாகர் கோவில்வடக்கு மக்களின் பேருதவியும் இருந்தமையால் இரண்டு மண்டபங்கள் வைரக்கல்லினாலும், இரண்டு மண்டபங்கள் சீமெந்துக் கற்களாலும் கட்டப்பட்ட ஆலய மஹாகும்பாபிஷேகம் 31.08.2014 அன்று சிறப்புற நடைபெற்றுள்ளது. இம் மஹாகும்பாபிஷேகத்தில் அடியேன் எஜமானாக கும்பாபிஷேக கிரிகைகளில் கலந்துகொள்ள எனக்குக் கிடைத்த திருவருளை நினைத்து ஆத்ம திருப்தி அடைவதுடன் இவ்வாலயம் அமைப்பதற்கும் கும்பாபிஷேகத்தினை

சிறப்புற நடாத்துவதற்கும் உதவிய அடியார்களுக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்க வேண்டுமென வேண்டிக் கொள்வதுடன் லண்டன் மாநகரிலிருந்து வருகை தந்து இம் மஹாகும்பாபிஷேகக் கிரியைகளை சிறப்புற நிகழ்த்திய நாகதம்பிரான் உபாசகர் சிவஸ்ரீ சிவசண்முகக் குருக்களுக்கும், ஏனைய சிவாச்சாரியார்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இம் மஹாகும்பாபிஷேகத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் மஹாகும்பாபிஷேகமலர் சிறப்புற அமைய வேண்டுமென மீண்டும் அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

**வல்லிபுரநாதர் தில்லைநாதன் (நாகர்கோவில்)**
ஓய்வு நிலை - நெல்லியடி
இலங்கை வங்கி முகாமையாளர்

# வாழ்த்துச் செய்தி

அதிகாலையில் கிழக்கே உதித்துவரும் உதயசூரியனின் மாணிக்கக் கிரணங்களை தன் செவ்வரிக் கண்களால் பார்த்த வண்ணம் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் "நாகர் கோயில் கண்ணகை அம்பாள்" மிகவும் சத்தி வாய்ந்த ஒரு தெய்வமாக விளங்குகின்றாள் - வேண்டுவார் வேண்டுவதை அளிப்பதிலும் (கொடுப்பதிலும்) அவர்களுக்கு வேண்டாத இன்னல்களை அழிப்பதிலும் அம்மனின் ஆற்றல் நிகரற்றது.

ஆதியில் இரகர் - சிதம்பரருக்கு வயோதிபம் வாய்ந்த வெண்ணிற ஆடையணிந்த மூதாட்டியாக (கிழவியாகக் காட்சி கொடுத்து எட்டு நாளைக்கு ஆதரித்து அனுசரித்து அனுப்பும் படி சொல்லி "சிலம்பையும், அம்மனையும் காட்டி, மறைந்த தாயாரின் மகத்துவம் அளந்தறிய முடியாத அற்புதமான செயலாகும்.) அம்பாளின் பொங்கல் எட்டு நாளும் ஆராதிக்கும் அடியார்கள் கூடி நின்று அம்பாளின் அருளைப் பெறுவது காணக்கூடியதாகவுள்ளது.

அம்பாளின் வணக்கம் மிகவும் பழமையானது அம்பாள் வணக்கம் வங்காள தேசத்துடன் வெகு காலமாக கொண்டாடப்பட்டு வருகின்றன. அங்கிருந்தே அம்பாள் வணக்கம் பாரத கண்டம் முழுவதிலும் மட்டுமல்லாமல் அண்டை நாடுகளான இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் பூர்வ காலத்திலேயே பரவி விட்டன. இராமகிருஷ்ண பரமஹம்சரும், சுவாமி விவேகானந்தரும் கூட அம்பாளின் உபாசகர்களாகவே விளங்கியிருக்கிறார்கள்.

ஆலயம் ஆரம்பகாலம் தொடங்கி இதுவரை எதுவித வரலாறும் இல்லாதிருந்த அம்மன் ஆலய வரலாற்றை அம்பாளின் ஈடுபாடும் பக்தியும் கொண்டுள்ள ஆலய தர்மகர்த்தா அவர்கள் தனது பெருமுயற்சியினாலும் மக்களின் ஆதரவினாலும் ஆலயத்தை புதிதாக அமைத்து கட்டி கும்பாபிஷேகம் செய்து அதற்கு ஒரு வரலாற்றையும் எழுதி புத்தகரூபமாக வெளியிடுவது மிகவும் பாராட்டுக்குரியதாகும். அதுவுமன்றி அம்பாளுடைய மற்றுமொரு அளவுகடந்த அருட்கொடையுமாகும். மேலும் அம்பாளுடைய ஆலயத்தைச் சிறப்புற அமைப்பதற்கு முன்னின்ற தர்மக கர்த்தா அவர்களுக்கும் உதவியாகவிருந்து பண உதவிபுரிந்த அடியார்களுக்கும் அம்பாளுடைய அருள் கிடைக்கவேண்டும் என்றும் அம்பாளின் கும்பாபிஷேகச் சிறப்புமலர் நன்கு அமைய வேண்டும் என்றும் எங்கள் குலமாதாவாகிய கண்ணகை அம்பாளை கைகூப்பி சிரம்தாழ்த்தி அன்புடன் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

**மு. சிதம்பரப்பிள்ளை**
*பரம்பரைத்தர்மகர்த்தா / தலைவர்*
*நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயம்.*

# ஈழத்து இலக்கிய மரபில் கண்ணகி பற்றிய இலக்கியங்கள்

சிலப்பதிகாரக் கதையைத் தழுவி ஈழநாட்டிலே எழுந்த கண்ணகி வழக்குரை என்னும் காவியமும் யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்களின் காலத்திற்குரியதாகக் கருதப்படுகின்றது. ஆரியச் சக்கரவர்த்திகளில் ஒருவரான சயவீரசிங்கையாரியன் என்னும் சகவீரனால் இது பாடப்பட்டது என்பர். கண்ணகி வழக்குரை மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள கண்ணகையம்மன் கோயில்களிலே ஆண்டு தோறும் விழாக் காலங்களிற் படிக்கப்பட்டு (பாராயணம்) வருவதாகும். இக்கண்ணகி வழக்குரைக் காவியத்தை 1968ஆம் ஆண்டு மட்டக்களப்பு வித்துவான் வி.சி. கந்தையா அவர்கள் பதிப்பித்துள்ளார்கள்.

சிலப்பதிகாரக் கதையைத் தழுவிய இக்காவியம் ஈழநாட்டின் வடபகுதியிலே கோவலனார் கதையென்ற பெயரில் வழங்கி வருகின்றது. இக்கோவலனார் கதையை 1962ஆம் ஆண்டு புலோலியூர் மா.சே. செல்லையா அச்சிட்டுவெளியிட்டுள்ளார். இக்கோவலனார் கதை புலோலி, மந்திகை கண்ணகையம்மன் கோயிலில் ஆண்டு தோறும் படிக்கப்பட்டு வருவதாகும்.

கண்ணகி வழக்குரைக் காவியம் வன்னிப் பிரதேசத்திலே சிலம்பு கூறல் என்னும் பெயரில் வழங்கி வருகின்றது. வன்னிப் பிரதேசத்திலேயுள்ள கண்ணகையம்மன் கோயில்களில் ஆண்டுதோறும் பாராயணம் செய்யப்பட்டு வரும் இச்சிலம்பு கூறல் எனும் காவியத்தைப் பல ஏட்டுப் பிரதிகளையும் ஒப்புநோக்கி ஆராய்ந்து 1990ஆம் ஆண்டு ஆய்வுப் பதிப்பாகச்சமர்ப்பித்து திரு. எம். ரகுநாதன் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார். தென்மராட்சியைச் சேர்ந்த மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன்கோயிலிலும் ஒரு சிலம்பு கூறல் படிக்கப்பட்டு வந்தது என்று அறிய முடிகின்றது. அத்துடன் நாகர்கோயில் கண்ணகை அம்மன் கோயிலில் கண்ணகி பற்றிய ஏட்டுச் சுவடி இன்றுவரை படிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த ஏட்டுச்சுவடி பதிப்பிக்கப்பட்டால் கண்ணகி கதை பற்றிய புதிய வெளிச்சம் ஒன்று தோன்றலாம்.

சிலப்பதிகாரக் கதையை அடிச்சட்டமாகக் கொண்டு ஈழநாட்டிலே எழுந்த கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல் ஆகியவற்றிலே எது முதலிலே தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது.

சிலப்பதிகாரத்தின் போக்கிலும், நோக்கிலும் இருந்து பல்வேறு மாற்றங்களைப் பெற்றுள்ள இக்காவியங்களிடையே வேறுபாடுகளும், முரண்பாடுகளும் காணப்படுகின்றன. ஆய்வாளர்களிடையே பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன.

கண்ணகி வழக்குரைக் காவியத்தை இயற்றியவர் யார் என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கண்ணகி வழக்குரையைப் பதிப்பித்த வி.சி. கந்தையா, சகவீரன், தேவையர்கோன், ஆரியர்கோன், காங்கேயன் முதலிய பெயர்கள் நூலாசிரியரின் பெயர்களாக நூலினுள் இடம் பெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டிக் காங்கேயன் என்பவனே இதனைப் பாடினான் என வலியுறுத்த முயன்றுள்ளார்.

கோவலனார் கதையைப் பதிப்பித்த மா.சே. செல்லையா இதனை இயற்றியவர் முட்குடாரிப்பு வெற்றிவேலுச் சட்டம்பியார் என்று குறிப்பிட்டுள்ளார். அக்குறிப்போடு வெற்றிவேலுச் சட்டம்பியார் போர்த்துக்கேயர் காலத்தவர் என்றும் அவர் கோவலனார் கதையைப் பாடியமை பற்றி வழங்கும் செவிவழிக் கதையொன்றையும் குறிப்பிட்டுள்ளார். கோவலனார் கதையினுள்ளும் இதைப் பாடியவர் காங்கேயன், தேவையர்கோன் என்று கூறப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இம் மூன்று நூல்களையும் ஒப்புநோக்கித் தகுந்த சான்றுகளுடன் சிங்கைச் செகராசசேகரனே கண்ணகி வழக்குரையைப் பாடினான் என்றும் சகவீரன் உள்ளிட்ட பல புனை பெயர்களை அவன் கொண்டிருந்தான் என்றும் F.X. C. நடராசா குறிப்பிடுவார். F.X.C நடராசாவின் கூற்றினை நிராகரிப்பது மிகவும் கடினமாகும்.

எழுத்து வடிவிலே தோன்றிய இக்காவியம் மனனமான நிலையிலே நீண்டகாலமாகக் கண்ணகி கோயில்களிலே படிக்கப்பட்டு (பாராயணம்) வந்திருக்கக்கூடும். மனனநிலைப் பாராயண மரபு காரணமாகப் பல்வேறு திரிபுகளையும், இடைச்செருகல்களையும் பெற்று கால, இடச் சூழ்நிலைகளிற்கு ஏற்ற வகையிலே மாற்றமடைந்திருக்கவும் கூடும். "படிப்பு" மரபு காரணமாகவும் வாய்மொழி இலக்கியப் பண்புகளை உள்வாங்கியிருக்கும் என நம்பலாம்.

எழுத்துருவிலான மூலவடிவம் சிதைந்து போன சூழ் நிலையிலே மனனமானவர்கள் பின்னர் ஏட்டு வடிவிலே எழுதிப்பாதுகாத்திருக்கக்கூடும். சமய, சமூக சூழ்நிலைகளை உள்வாங்கி ஏடெழுதியவர்கள் தங்கள் புலமைக்கேற்ற

வகையிலே புதிய விடயங்களையும் புகுத்தியிருக்கலாம் எனக் கருதுவது தவறாகாது. ஏடெழுதியவர்கள், எழுதியவர்கள் என்ற வகையிலே தமது பெயர்களையும் குறிப்பிட்டு எழுதியிருக்கலாம். இயற்றியவர் பற்றிய பிரச்சினைகளுக்கு ஏடெழுதியோரும் காரணமாகலாம்.

சிதைந்து போன கண்ணகி வழக்குரைக் காவியத்தை நினைவில் வைத்து ஏட்டிலே எழுதியவர்களில் ஒருவராக முன்குடாரிப்பு வெற்றிவேலுச் சட்டம்பியாரைக் கொள்ளலாம் போலத் தெரிகிறது.

சகவீரன் எனும் சிங்கையாரியனாலே எழுதப்பட்ட இக்காவியம் பல்வேறு மாற்றங்களுடனும் திரிபுகளுடனும் வடமராட்சிப் பிரதேசத்திற்கூடாக வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று அங்கிருந்து கிழக்கு மாகாணத்திற்குச் சென்றிருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

ஐரோப்பியர் வருகையையொட்டி நாட்டார் இலக்கிய வகைகளையும் கிராமிய வழிபாட்டு மரபுகளையும் மெல்ல மெல்லக் கைவிடத் தொடங்கிய யாழ்ப்பாணச் சமூகம் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே பெருமளவுக்கு இவற்றைக் கைவிட்டுவிட்டமையையும் அவதானிக்க முடிகின்றது. சைவ மறுமலர்ச்சியின் மூலவர் எனக் கருதப்படும் ஆறுமுகநாவலர் "செட்டிச்சியான கண்ணகியை' வழிபடுவதைப் பலமாக எதிர்த்தமையும் இவ்விடத்திலே நினைவு கூரத்தக்கது. இக்காலகட்டத்தினைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சிறப்புற்று விளங்கிய பலகண்ணகி அம்மன் கோயில்கள் இராஜராஜேஸ்வரி கோயில்களாக மாற்றமடைந்து ஆகம நெறிப்பட்ட வழிபாட்டு மரபுகளுக்கு உட்பட்டமையும் குறிப்பிடக்கூடிய அம்சங்களாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சைவ மறுமலர்ச்சிச் செல்வாக்குக்குப் பெருமளவு உட்படாத வன்னிப் பிரதேசத்திலும், மட்டக்களப்புப் பிரதேசத்திலும் கண்ணகை அம்மன் வழிபாடு நின்று நிலைக்கும் வாய்ப்பினைப் பெற்றது. இவ்வழிபாட்டு மரபு காரணமாகவே இப்பிரதேசங்களில் பெருமளவு ஏட்டுப் பிரதிகள் பிரதி செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளன என்று கருதலாம்.

கண்ணகி வழக்குரையிலே யாழ்ப்பாணப் பேச்சு வழக்குச் சொற்கள் பெருமளவிற்குக் காணப்படுகின்றமையை F.X.C நடராசா தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். யாழ்ப்பாண மன்னர் காலத்திலே தோன்றிய இக்காவியம் பின் வந்த சமூக மாற்றங்களால் வழக்கிழந்து போக வன்னி, மட்டக்களப்பு, வடமராட்சி கிழக்குப் பிரதேசங்கள் இக்காவியத்தைப் பேணிப் பாதுகாத்துள்ளன எனக் கருதுவது தவறாகாது.

கண்ணகி வழக்குரையாசிரியர் தமிழ் இலக்கியங்களிலே நல்ல பரிச்சயமுடையவராக இருந்துள்ளார் என்பதை

இந்நூல் தெளிவாகக் காட்டுகின்றது. திருக்குறள், இராமாயணம், பாரதம், நளவெண்பா, கந்தபுராணம் முதலியவற்றின் தாக்கத்தினை இக்காவியத்தின் பல இடங்களிலும் காணமுடிகின்றது. வகை மாதிரிக்கு ஓரிரு உதாரணங்களைச் சுட்டிக்காட்டலாம்.

காவிரியே யென்னைப்போல் கலங்கியுளந் தடுமாறி
மேவிநீ யலைந்ததுமேன் விழிபோல முத்தமெல்லாம்
பாவியிரு கரையடைந்தேன் பசலைபல தான்பூத்துத்
தாவியென்னைப் போலுனக்குத் தலைவர் பிரிந்தனரோதான்

முல்லைக்கொடிப் பூவனமும் முழங்கிய வெண்சங்கமமெல்லாம்
மல்லிகயிற் குமிழ்களெல்லாம் வண்டூத வான்கருப்பு
வில்லியவன் கணைதெரிந்து மெய்காவ லாகிவர
சில்லமது முறிகொடுத்துச் சென்றதுபோல் மாதவியர்

நளவெண்பாவில் வரும் "போவாய் வருவாய்" எனத் தொடங்கும் கவிதையையும், "மல்லிகையே வெண்சங்காய் வண்டூத' என்னும் கவிதையையும் மேற்காட்டிய இரண்டு செய்யுள்களும் நினைவூட்டு கின்றன. இவ்வாறு நளவெண்பாப் பாடல்களின் சாயல் கொண்ட பல செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன;

பொய்யாது வள்ளுவனார் புகன்றமொழி பூதலத்தில்
மெய்யாக யானறிந்தேன் வேறுரைக்க வேண்டாங்காண்
செய்யான் நேர் மாதவியாள் தீயெழவே சொன்னமொழி
நெய்யார்வேல் விழியாரே நெஞ்சிலன்னு மெரியுதுகாண்

அல்லலற்பட் டாற்றாதார் அழுத கண்ணீர் ஆறாய்த்தான்
செல்வத்தைத் தேய்க்கும்படை யென்றே செப்பியதும்
வல்லுற்ற திண்புயத்தாய் வள்ளுவனார் செந்தமிழ்நூல்
புல்லர்க்கு நல்லறிவாம் பூழியனே கேட்டிலையோ.

இவ்வாறு திருக்குறளை நினைவுபடுத்தும் செய்யுள்களும் பல இடம்பெற்றுள்ளன. இவற்றோடு கம்பராமாயணம், கந்தபுராணம் முதலானவற்றின் சொற்றொடர்கள், உவமை, உருவகம், பொருள் ஆகியன பல்வேறிடங்களிலும் பயின்று வருவதை அவதானிக்க முடிகின்றது. மேற்காட்டிய செய்யுள்கள் சிற்சில வேறுபாடுகளுடன் கோவலானர் கதை, சிலம்பு கூறல் ஆகியவற்றில் இடம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கண்ணகி வழக்குரை ஆசிரியருக்குத் தமிழ் இலக்கியங்களிற் பரிச்சயம் இருந்தது போலவே தமிழ் இலக்கணத்திலும் நல்ல பரிச்சயம் இருந்திருக்கின்றது என்பதை இந்நூலில் இடம்பெறும் சில செய்யுள்கள் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது. உதாரணமாக ஒரு செய்யுளைச் சுட்டிக் காட்டலாம்;

தழுவுகின்ற திணையிரண்டும் தண்ணளிசேர் பாலைந்தும்
எழுவாயும் வேற்றுமைகள் எட்டுடனே தொலையாறும்
விழுமையுள்ள காலங்கள் மூன்றுடனே வரவுசொல்ல
முழுதுலகில் வல்லனென்பான் முழுமோடன் தானலவோ

தமிழ் இலக்கிய, இலக்கணப் பயில்வுப் பாரம்பரியமொன்று யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திலே சிறப்புற்று விளங்கியமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கண்ணகி வழக்குரையைச் சுட்டிக்காட்டலாம்.

செந்நெறிப் பாங்கான இலக்கியங்களின் செல்வாக்குச் செறிந்து காணப்படுவது போலவே கண்ணகி வழக்குரையில் நாட்டார் இலக்கியச் செல்வாக்கும் செறிந்து காணப்படுகின்றது. சிறப்பாக, நாட்டார் பாடல் ஓசை மரபு விஞ்சிக் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. சகுனம், சாத்திரம், நம்பிக்கைகள், சடங்குகள் முதலான நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் இடம்பெறுவதுடன் ஆங்காங்கே பழமொழி களும் இடம்பெற்றுள்ளன. நாட்டுக் கூத்துக்குரிய தாளக்கட்டுக்களில் அமைந்த பல பாடல்களும் இடம்பெற்றுள்ளன. வகைமாதிரியாகப் பின்வரும் பாடல்களைச் சுட்டிக்காட்டலாம்.

தகதக திகுதிகு திமிகிட திமிகிடதாந்
தளங்கு தளங்கு தளங்கு திமித்தோம்
திகுதக திகுதக திக்குட தரிகிட
திக்குண தகுசெக செககிண தோம்
தொகுதொகு நகுநகு தொங்கிட தங்கிட
தோதகு தத்தி யெனச் சவதம்
வகைபல வரியதோர் தாளவகைப்படி
மாதவி சோழன்முன் ஆடினளே.

தத்தித் தோம் ததிக்கிண தோம்
தக்குண தக்குண தக்கிண தோம்
தித்தித் திதிகுதி செங்கிட தங்கிட
செங்கிட செங்கிட தாகிடதோம்,
........................................................
........................................

தக்கக் கெக்கி றீங்கு தடீங்கு
தாத திங்கிண தரிகிணதோ
திக்கிட திக்குட திமிகிட திக்கு
திக்கிண செககிண செககிணதோ
தொக்குட தொக்குட தோதெக் கிட
தொகிட தொகிட தோவெனவே
சர்ப்பம தாடின கோலம தென்னச்
சுற்றியே மாதவி யாடினளே.

இத்தகைய தாளக்கட்டுக்களுடன் கூடிய பாடல்கள் பல மாதவி அரங்கேற்று காதையிலே இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் ஈழத்து நாட்டுக்கூத்து மரபினைப் புலப்படுத்தும் தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. ஈழத்து நாட்டுக் கூத்து மரபினை ஆய்வு செய்பவர்களுக்கு உதவக்கூடிய பல சான்றுகள் கண்ணகி வழக்குரையிலே இடம்பெற்றுள்ளன.

வைத்தியம், சோதிடம் முதலிய அறிவியற்றுறைக் கூறுகளும், மருந்து, மந்திரம், வசியம் முதலான கிராமிய நம்பிக்கை சார் கூறுகளும் கண்ணகி வழக்குரையிலே கலந்து பயின்று வருகின்றமையையும் கண்டு கொள்ள முடிகின்றது. நாட்டார் வழக்காற்றியற் கூறுகளும் செந்நெறி இலக்கிய மரபுக் கூறுகளும் சங்கமமாகிக் காணப்படும் கண்ணகி வழக்குரைக் காவியம் ஒரு வகையிலே தனித்தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. ஈழத்து வழிபாட்டு மரபில் கண்ணகி பற்றி எழுந்த இலக்கியங்கள் நுண்ணாய்வு செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

**இரகுவம்சம்**

ஈழத்திலெழுந்த செந்நெறிப் பாங்கான, பெருங்காப்பியப் பண்புநெறி கொண்ட காவியமாக இரகுவம்சத்தைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்தை அரசு புரிந்த எட்டாம் பரராசசேகரன் (1591 - 1616) வேண்டுகோட்படியே அரசகேசரி இரகுவம்சத்தைப் பாடினான் என்பர். இரகுவம்சத்தின் பாயிர இறுதிச் செய்யுள் இக்காவியம் பரராசசேகரன் காலத்தது என்பதை உறுதி செய்கின்றது. அப்பாயிரச் செய்யுள் வருமாறு.

இன்ன காதை இயன்ற இரும்பொருள்
துன்னு செஞ்சொல் துகள்தபு தூயநூல்
புன்னு செஞ்சொற் பரராச சேகர
மன்ன னின்பம் மனங்கொள வாய்ந்ததே

அரசகேசரி எதிர்மன்னசிங்கன் என்ற எட்டாம் பரராச சேகரனின் தம்பியென்று சில வரலாற்றாசிரியர்களும்,

மருமகன் என்று சில வரலாற்றாசிரியர்களும் குறிப்பிடுகின்றனர். எது எவ்வாறாயினும் அரசகேசரி அரச குடும்பத்தினர் என்பதிலே கருத்து முரண்பாடு இல்லை.

வடமொழி தென்மொழியில் புலமை பெற்றிருந்த அரசகேசரி அரசனின் தூண்டுதலினால் இரகுவம்சத்தை மொழிபெயர்த்தியற்றிய காலச் சூழ்நிலை மிகுந்த கவனத்திற்குரியதாகின்றது.

வன்திசைக் காளிதாசன் வடமொழி
தென்திசைத் தமிழால் நனி செப்புகேன்

என்று பாயிரத்திலே அரசகேசரி குறிப்பிடுகின்றார். அப்பாயிரச் செய்யுளுக்கு உரையெழுதிய வித்துவ சிரோமணி கணேசையர் "வீரர்களாகிய ஆரியர்களிருக்குந் திசையாதலின் வடதிசையை வன்திசை என்றார்" என்று குறிப்பிடுவர்.

இலங்கையின் வடபுலத்திலே நிலைபெற்றிருந்த அரசு எதிர்மன்னசிங்கன் எனும் எட்டாம் பரராசசேகரன் காலத்திலே பலவிதமான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்ததென்பதை யாழ்ப்பாண இராச்சியம் பற்றி ஆய்வு செய்த பலரும் குறிப்பிடுகின்றனர்.

யாழ்ப்பாண அரசுக்குப் பல பிரச்சினைகள் தொடர்ந்ததால் அது வீழ்ச்சியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் சூழ்நிலையிலேயே இரகுவம்சம் என்னும் காவியம் அரசகேசரியாலே தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. இராமராச்சியம் என்ற இலட்சியத்திலே எதிர்கால யாழ்ப்பாண மன்னர்களை வழிநடாத்துவதற்காக, பரராசசேகரன் இரகுவம்சம் தமிழாக்கம் பெறுவதை விரும்பியிருக்கலாம் என்று பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை கருத்துத் தெரிவிப்பார்.

யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சி நோக்கிய காலகட்டத்தில் அரசகேசரியின் இரகுவம்சம் தோன்றியதற்கு யாழ்ப்பாண அரசு கட்டிலுக்குரிய வாரிசுரிமைப் போராட்டங்களும் ஒரு காரணியாக இருந்திருக்கலாம். எதிர்மன்னசிங்க பரராசசேகரன் அரச பாரம்பரிய வாரிசுரிமைக்குரிய தனது ஏகபுத்திரனின் உரிமையை நிலைநிறுத்தும் பொருட்டு, அரச பாரம்பரிய வரலாறு கூறும் இரகுவம்சத்தைத் தமிழிலே பாடும்படி அரசகேசரியைத் தூண்டியிருக்கலாம் என்றும் கருதமுடிகின்றது.

> .... எதிர்மன்னசிங்க பரராசசேகரன் மரணப் படுக்கையிலே இருக்கும்போது தன்னேக புத்திரனை அரசகேசரி வசம் ஒப்புவித்து அச்சிறுவன் வயதுடையவனாகும் வரை

இராச்சிய பாரத்தைத் தாங்கிக் கொள்ளுமாறு வேண்டினன். அரச பரிபாலனஞ் செய்து வருகையிற் சங்கிலியனாற் கொலையுண்டார்.

யாழ்ப்பாண இராச்சியத்திலே அரச வாரிசுரிமைப் போராட்டம் நிலவிய காலகட்டத்திலேயே அரசகேசரியின் இரகுவம்சம் தோன்றியுள்ளது. போர்த்துக்கேயரின் அச்சுறுத்தல்கள், நாயக்க மன்னரின் தலையீடுகள், சிங்கள அரசின் பார்வைகள் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பலவீனப்படுத்திய வேளையிலே உள்ளார்ந்த அரச வாரிசுரிமைப் போராட்டங்களும் நிகழ்ந்து கொண்டிருந்தது. அரச "குலமுறை" பேணப்படுவதைச் சிறப்பாகக் காட்டும் காளிதாசனின் இரகுவம்ச காவியம் மொழி பெயர்த்தியற்றப்பட வேண்டிய தேவை அரசகேசரிக்கு ஏற்பட்டிருக்கின்றது என்று கருதுவது தவறாகாது.

அரசகேசரியின் இரகுவம்சத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும் பொழுது அ.ச. ஞானசம்பந்தன் கூறும் கருத்தொன்றினை நினைவுபடுத்துவது பயனுடையதாகும்.

> ஒரு சமுதாயத்தை உள்ளடக்கிய பேரரசு மேலும் மேலும் வளர்ந்து கொண்டு செல்லும் நிலையிலும், அச்சமுதாயத்தின் மொத்த உணர்ச்சிகளைக் காட்டக்கூடிய காப்பியம் தோன்றுவதுண்டு. இதன் எதிராக ஓஹோ என்று வாழ்ந்த ஒரு சமுதாயம் தளர்ச்சி அடைந்து இறங்கு முகம் நோக்கிச் செல்லும் நிலையிலும் அச்சமுதாயத்தில் சிறந்த காப்பியம் தோன்றுவதுண்டு. இறங்கு முகத்தில் இருக்கும் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி அதன் பழைய பெருமையையும் அப்பெருமைக்கு அடித்தளமாய் இருந்த காரணத்தையும் எடுத்துக் கூற மறுபடியும் புத்துயிர் பெற்று முன்னேற வேண்டுமானால் பழைமையிலுள்ள சிறந்தவற்றை எடுத்துக் கொண்டாலே ஒழிய முன்னேற முடியாது என்று அடித்துக்கூறவும் அச்சமுதாயத்தில் காப்பியம் தோன்றுவதுண்டு.

யாழ்ப்பாண இராச்சியம் "இறங்குமுகம்" நோக்கிச் சென்று கொண்டிருந்த காலகட்டத்திலே அதன் அரச பாரம்பரிய மரபுரிமையை நினைவுபடுத்த இரகுவம்சக் கதை ஏற்புடையதாக அமையும் என்று அரசகேசரியும் பரராசசேகரனும் கருதியிருக்கலாம்.

திலீப மகாராசன் காமதேனுவை வணங்கி இரகு என்பவனைப் புதல்வனாகப் பெற்றமையும், இரகுவின் சிறப்புக்களும், இரகுவின் மகன் அயன் என்பவனின் பெருமைகளும், அயனின் மகனான தசரதச் சக்கரவர்த்தியின் கதையும், தசரதன் மகனாகிய இராமன் வரலாறும், இராமனின் மகனான குசனின் கதையும் வேறுபல விடயங்களும் இரகுவம்சத்திலே சிறப்பாக

விவரிக்கப்பட்டுள்ளது. ஆட்சிப் பொறுப்பும் பரம்பரை பரம்பரையாக வரவேண்டுமென்பதே இரகுவம்சத்தின் அடிப்படைப் பாடுபொருளாகும். இப்பாடுபொருள் அன்றைய யாழ்ப்பாண அரசியல் நிலைக்கும் ஏற்புடையதாக இருந்திருக்கக்கூடும்.

இக்காவியம் பொதுக்காண்டம், சிறப்புக்காண்டம், பொதுச் சிறப்புக் காண்டம் என முப்பிரிவுகளையுடையதாகக் காணப்படுகின்றது. பொதுக்காண்டம் ஆற்றுப்படலம் முதலாக இந்துமதி பிறப்பு நீங்கு படலம் ஈறாகப் பதினாறு படலங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. சிறப்புக்காண்டம் தசரதன் சாபமேற்ற படலம் முதலாக அவதார நீங்கு படலம் ஈறாக ஆறு காண்டங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. பொதுச் சிறப்புக்காண்டம் குசன் அயோத்தி செல்லும் படலம் முதலாகக் குலமுறைப் படலம் ஈறாக நான்கு படலங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

வடமொழியிலும் தமிழ்மொழியிலும் புலமை பெற்று விளங்கிய அரசகேசரி தமது காலத்திற்குரியதான கடினமான நடையிலே செய்யுள்களைச் செய்துள்ள போதும் கம்பராமாயணத்தின் செல்வாக்குக்கும் உட்பட்டுள்ளார். கம்பன் கையாண்ட சொற்கள், சொற்றொடர்கள், உவமை, உருவகம் முதலானவற்றை அரசகேசரி தாராளமாகக் கையாண்டுள்ளார். எனினும், கம்பராமாயணத்தின் தரத்தை இரகுவம்சத்தினால் எட்ட முடியவில்லை. கம்பனின் செல்வாக்கிற்கு அரசகேசரி உட்பட்டமையைப் புலப்படுத்த இரகுவம்சத்தின் கடவுள் வாழ்த்துச் செய்யுளொன்றை வகை மாதிரியாகச் சுட்டிக்காட்டலாம்.

> உலகம் யாவையு நிற்பன வுத்தொழில்
> விலக லாது விளைத்தும் விளைத்திலா
> திலகு நீர்மைய தெப்பொரு ளப்பொரு
> ளலகி லாத வருட்கடன் மூழ்குவாம்.

கம்பன் பாடிய "உலகம் யாவையும் தாமுளவாக்கலும்" என்னுஞ் செய்யுளை மேலே சுட்டிய செய்யுள் நினைவூட்டுகின்றது.

கம்பராமாயணத்தில் மாத்திரமன்றிப் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் அரசசேகரிக்கு ஆழ்ந்த புலமை இருந்தமையை அவரது காவியத்தினூடு காணமுடிகின்றது.

யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்திலே மிக நீண்ட காலமாக அரசகேசரியின் இரகுவம்சம் பாடஞ் சொல்லப்பட்டு வந்துள்ளது. மிக அண்மைக் காலம் வரை

இப்பாடஞ் சொல்லும் மரபு வழங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. இக்காவியம் பாடஞ் சொல்லப்பட்டு வந்தமையினாலேயே "தப்பிப் பிழைத்தது" என்றுகருதலாம். பாடஞ்சொல்லும், கேட்கும்தேவைக்காகவே இக்காவியம் படியெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டிருக்கும். 19ஆம் நூற்றாண்டிலே புகழ் பெற்று விளங்கிய யாழ்ப்பாணத்துப் புலவர்கள் பலர் அரசகேசரியின் இரகுவம்சத்திலே சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்றும் அறிய முடிகின்றது.

அரசகேசரியின் இரகுவம்சத்தைப் பாடஞ்சொல்லி வந்த வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை 1887ஆம் ஆண்டு இதனை அச்சிட்டு வெளிப்படுத்தினார். இவரது பதிப்பிலே 2444 செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. இதற்கு மேலும் பல செய்யுள்கள் இருந்திருக்க வேண்டுமென்றும் அவை சிதைந்திருக்க வேண்டுமென்றும் பொன்னம்பல பிள்ளை இதன் பதிப்புரையிலே குறிப்பிட்டுள்ளார்.

அரசகேசரியின் இரகுவம்சத்திலே சில செய்யுள்களைத் தெரிந் தெடுத்து அவற்றிற்கு விரிவாக உரையெழுதி இரகுவம்சக் கருப்பொருள் என்னும் பெயரிலே சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் நூலொன்று வெளியிட்டுள்ளார். இரகுவம்சம் பொதுக் காண்டத்திற்கு வித்துவ சிரோமணி சி. கணேசையர் சிறப்பானதோர் உரையெழுதியுள்ளார். இரகுவம்ச உரை நூலின் முன்னுரையிலே வித்துவசிரோமணி கணேசையர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> வித்துவசிரோமணி ஸ்ரீமத் பொன்னம்பலபிள்ளையவர்களிடத்தும் சுன்னாகம் வித்துவான் ஸ்ரீமத் குமாரசுவாமிப் புலவரவர்களிடத்தும் கேட்டறிந்தவாறே யான் இதற்கோருரை எழுதி வெளிப்படுத்தலாயினேன்.

கணேசையரின் இக்கூற்று யாழ்ப்பாணத்திலே இரகுவம்சம் பாடஞ்" சொல்லப்பட்டு வந்தமையை அரண் செய்கின்றது. இலக்கியத் தரத்தினைவிட இது ஈழத்துக் காவியம் என்ற வகையிலேயும் கற்பிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதமுடிகின்றது.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**
*முன்னாள் தலைவர் தமிழ்த்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

# நாகர்கோவில் கண்ணகை அம்மன் தோற்றமும் நடைபெறும் விழாக்களும்

நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மன் ஆலயம் இற்றைக்கு சுமார் 250 வருடங்களுக்கு முன் தோன்றியிருக்கலாம். இவ்வாலயத்தின் ஸ்தாபகர் சிதம்பரர் இரகர். கோவில் பதிவேடுகளின் படி இவர் இவ்வாலயத்தினை 1875 இல் பதிவு செய்துள்ளார். வெண்மணல் பிரதேசத்தில் "மாளிகைத்திடல்" என்னும் காணியில் ஒரு பெரிய ஆலமர விருட்சத்தின் கீழ் சிறு கொட்டில் ஒன்றினை அமைத்து கண்ணகை அம்மனின் ஒரு கால் சிலம்பினை வைத்து ஊர்மக்களின் உதவியுடன் பூசை வழிபாடுகளை மேற்கொண்டு வந்துள்ளார். அக்காலப் பகுதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பூர்வீக நாகதம்பிரான் அருள்மிகு பூர்வீகக் கண்ணகை அம்மன் ஆலயங்களின் பூசகராகவும் தர்மகர்த்தாவாகவும் இருந்துள்ளார். இவர் காலமானதும் இவரது மகள் சின்னாச்சிப்பிள்ளையின் மகன் முருகேசு சதாசிவம் அவர்கள் 1924 முதல் 1933 வரை இவ்விரு ஆலயங்களின் பூசகராகவும் நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மனின் பரம்பரை தர்மகர்த்தாவாகவும் இருந்துள்ளார். இவரின் பின் சதாசிவத்தின் மகன் ஆசிரியர் வல்லிபுரநாதர் பிராமணர்களை பூசைக்கு நியமித்து பிரதி திங்கட் கிழமை தோறும் பூசை வழிபாடுகளை மேற்கொண்டு வந்ததுடன் வைகாசிப் பொங்கல் விழாக்கால பூசகராகவும் இருந்து கண்ணகை அம்பாளின் பணிவிடைகளை மேற்கொண்டு வந்தார்.

நாகர்கோவில், நாகர்கோவில் வடக்கு, குடாரப்பு மக்களின் உதவியுடன் களிமண்ணினால் கட்டப்பட்டிருந்த ஆலயத்தை சீமந்து கற்களினால் புனரமைத்து பஞ்ச லோகத்திலான கண்ணகை அம்மனின் திருவுருவையும், கருங்கல்லினாலான பிள்ளையார் திருவுருவையும் பிரதிட்டை செய்து காலயுத்தி வருடம் சித்திரை மாதம் 14 ஆம் நாள் (27.04.1978) வியாழக் கிழமை காலை 10 மணி 05 நிமிடம் முதல் 11 மணி 10 நிமிடம் வரையுள்ள மூலநட்சத்திரத்துடன் கூடிய மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் அல்வாய் மாலிச்சந்தி பிரதமகுரு கிரியாகால முத்தாமணி பிரம்மஸ்ரீ தேவராசக் குருக்கள் அவர்களைக் கொண்டு விநாயகப் பெருமான், மூலமூர்த்தி கண்ணகை அம்பாளுக்கு மகாகும்பாபிஷேகத்தினை ஆலய பரிபாலனகர்த்தா ஆசிரியர் வல்லிபுரநாதர், மற்றும் நாகர்

கோவில், நாகர் கோவில் வடக்கு, குடாரப்பு மக்கள் ஒன்றிணைந்து வெகு விமரிசையாக நிறைவேற்றினார். ஆசிரியர் வல்லிபுரநாதர் 1933 முதல் 1987 வரை விழாக்காலப் பூசகராகவும், ஆலய பரம்பரைத் தர்மகர்த்தாவாகவும் இருந்துள்ளார். தனது வயோதிபம் காரணமாக 1988இல் தனது இரண்டாவது மகனை விழாக்கால பூசகராகவும் நியமித்து நிர்வாகப் பொறுப்பினை ஒப்படைத்தார். இவ்வூர் மக்களின் அனுசரணையுடன் கண்ணகை அம்மனின் பணிவிடைகளை மேற்கொண்டு வருகின்றார்.

2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் யுத்த சூழ்நிலை காரணமாக நாகர்கோவில் மக்கள் அனைவரும் இடம் பெயரவேண்டிய துயரச் சம்பவம் இடம்பெற்றது. அதன்பின்னர் நாகர்கோவில்க் கிராமம் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டது. இப்பகுதிக்கு மக்கள் எவரும் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டது. இப்பகுதியில் உள்ள அனைத்துக் கோவில்களிலும் பூசை, ஆராதனைகள் யாவும் தடைப்பட்டது. யுத்தம் முடிவடைந்த பின் 2009 ஆம் ஆண்டு ஆவணி மாதமளவில் நாகர்கோவில் வரலாற்றுப் புகழ் பெற்ற பூர்வீக நாதம்பிரான் ஆலயத்துக்கும், நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மன் ஆலயத்திற்கும் இராணுவ பாதுகாப்புடன் சென்று பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

நாகர்கோவில் வரலாற்றுப் புகழ்மிக்க பூர்வீக நாகதம்பிரான் ஆலயம் புனரமைக்கப்பட்டு 2011 ஆண்டு மஹாகும்பாபிசேகம் நடைபெற்றது. எனினும் நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மன் உடன் புனர்நிர்மாணம் செய்ய வேண்டிய நிலை காணப்படவில்லை. எனினும் காலப்போக்கில் யுத்தத்தின் தாக்கம் மூலஸ்தான கட்டடத்தில் வெடிப்பு ஏற்படத் தொடங்கியது. இதனால் உடன் புனர்நிர்மாணம் செய்ய வேண்டி ஏற்பட்டது. இதன் காரணமாக விஜய வருடம் ஆனி மாதம் 30ஆம் திகதி (14.07.2013) ஆனி உத்தர நட்சத்திரத்திர வளர்பிறை நாள் சிங்கலக்கினத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. விஜய வருடம் ஐப்பசி மாதம் 02 ஆம் திகதி (19.10.2013) சனிக்கிழமை கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டது. நாகர்கோவில், குடாரப்பு, நாகர் கோவில் வடக்கு மக்களின் உதவியுடன், மூலஸ்தானம், அர்த்தமண்டபம், என்பன வைரக்கல்லினாலும், மகாமண்டபம், தர்சன மண்டபம் என்பன சீமெந்துக் கற்களாலும் அழகுற அமைக்கப்பட்டு ஜய வருஷம் ஆவணி மாதம் 15 ஆம் நாள் (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையுள்ள சுவாதி நட்சத்திரத்துடன் கூடிய கன்னிலக்கின சுப வேளையில் நாகதம்பிரான் உபாசகர்

சிவஸ்ரீ. க. சிவசண்முகக் குருக்கள் (ஆலய பரம்பரை பிரதம குரு) அவர்களைக் கொண்டு ஆலய எசமான் முன்னாள் நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வல்லிபுரநாதர் தில்லைநாதன் அவர்களுடன் நாகர்கோவில், குடாரப்பு, நாகர்கோவில் வடக்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மிக விமரிசையாக நிறைவேற்றினர்.

நாகர் கோவில் அருள்மிகு கண்ணகை அம்மன் கட்டடப் பணியை மிகக் குறுகிய காலத்தில் கவினுற அமைத்துத் தந்த ஏழாலை கிழக்கு ஏழாலையைச் சேர்ந்த திரு. தெய்வேந்திரம் ஈஸ்வரன் அவர்களுக்கு மேற்படி ஆலய நிர்வாகத்தினர் "வைரக்கல் ஆயன வேந்தன்." என்னும் பட்டத்தினை பெருமையுடன் வழங்கி கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றனர்.

இவ்வாலயத்தில் இடம் பெறும் நிகழ்வுகள்

1. பிரதி திங்கட்கிழமை தோறும் ஒரு கால பூசை
2. பங்குனித்திங்கட் விரதம்: நாகர்கோவில், குடாரப்பு, நாகர் கோவில் வடக்கு மக்கள் விரதம் அனுஸ்டித்து இறுதித் திங்கள் தினத்தன்று அன்னதானம் வழங்கிக் கொண்டாடுவர்
3. வைகாசிப் பொங்கல் : இவ்வாலயத்தில் மிகப்பழமையும், புதுமையும் வாய்ந்த ஏடு ஒன்று உண்டு. இவ் ஏடு குற்று இல்லாது நாகர்கோவில், குடாரப்பு கந்தர் வெற்றிவேலு (வெற்றிவேலு சட்டம்பியார்) அவர்கள் செய்யாத தவறு ஒன்றுக்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது கண்ணகை அம்மனின் திருவருட்கடாட்சம் கிடைக்கப்பெற்று சிறையில் இருந்து கொண்டு கண்ணகை அம்மன்மீது 14 நாட்களில் பாடி முடித்த போது தான் விடுதலை ஆனதாக இவ்வேட்டுப்பிரதியில் குறிப்பிட்டுள்ளார். இவ் ஏடு எக்காலத்தில் எழுதப்பட்டதுஎனக் கூறமுடியாதுள்ளது. கண்ணகைஅம்மன் பொங்கல் விழா வருடா வருடம் வைகாசி விசாக நட்சத்திரத்திற்கு முதல் திங்கள் கிழமை கும்பம் வைக்கும் நிகழ்வுடன் இவ்வாலயத்தில் ஆரம்பமாகி, தொடர்ந்து எட்டு நாட்ளும் கோவலன் கண்ணகி கதையினைப் படித்து,விரதம் அனுஸ்டிப்பது ஒரு முக்கிய நிகழ்வாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கதொன்றாகும் எட்டாவது நாள். பொங்கல் விழாவும் விசேட பூசை ஆராதனைகள் நடைபெற்று கண்ணகி கோபம் தணியக் குளிர்ச்சியும் படிக்கப்படும். பின்புகண்ணகிஅம்மன் வற்றாப் பளைக்குச் செல்வதற்கான வழிவிடுதலும்நடைபெறும். இறுதியாக வரலாற்றுப் புகழ்மிக்க பூர்வீகநாகதம்பிரான் ஆலயத்திற்கு

அருகாமையில் அமைந்துள்ள நாககேணியில் மக்கள் சகிதம் அம்பாள் தீர்த்தமாடுவதுடன் விழா நிறைவுறும்.

மணவாளக் கோலம் :- வருடா வருடம் கும்பாபிஷேக தினத்தன்று கொண்டாடப்படும் ஒரு நிகழ்வாகும். இவ்விழா 2015ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும், ஆவணி மாதத்தில் வரும் சுவாதி நட்சத்திர தினத்தன்று கொண்டாடப்படவுள்ளது. அன்றையதினம் விசேட அபிசேகம் பூசை நடைபெற்று அம்பாள் திருவீதி உலா வந்து திருவூஞ்சல் ஆடி இருப்பிடம் சென்று அமர்வார். கண்ணகை அம்மனுக்குரிய திருவூஞ்சல் பாவினை நாகர்கோவில் குடாரப்பு சிவ அன்பர் புலவர் கணபதிப்பிள்ளை குமாரசுவாமி அவர்கள் பாடி வழங்கியுள்ளார்.

இறுதியாக நவராத்திரி பூசை நிகழ்வுகளுடன் வருடாந்த நிகழ்வுகள் அனைத்தும் நிறைவுறும்.

தற்போது இவ்வாலய பூசகராக பிரம்மஸ்ரீ சிவரூபக் குருக்கள் குகனேஸ்வரசர்மா இருந்து வருகின்றார்.

இவ்வாலயத்தில் நடைபெறும் சகல வைபவங்களிலும் நாகர்கோவில், குடாரப்பு பூர்வீக குடிகளாகிய வேளாளரும், மீனவ சமூகத்தினரும் ஒன்றிணைந்து சகோதரர்களாக ஆலய பணிவிடை களைச் செய்து கண்ணகை அம்பாளின் அருட்பிரசாதத்தைப் பெறுவதற்குக் காத்திருப்பது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

இம் மஹாகும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து வெளிவரும் கும்பாபிஷேக மலர் சிறப்புற அம்மாளின் பாதாரவிந்தங்களை வேண்டித் துதிக்கின்றேன்.

**வல்லிபுரநாதர் பத்மநாதன்**
விழாக்காலப் பூசகர்
ஓய்வுநிலை மோட்டார் போக்குவரத்து
உதவி ஆணையாளர், யாழ் மாவட்டம்.

# கும்பாபிஷேகம்

ஆதியும் அந்தமுமற்றதாகிய எங்கும் வியாபித்து பரந்து விளங்கும் இறைவனை உருவத்திருமேனியில் தியானித்து ஆவாகித்து வழிபடவேண்டிய முறைகளை ஆகம நூல் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறியிருக்கின்றது. அந்த உருவத் திருமேனியை வைத்து வழிபடவேண்டிய இடமாகிய ஆலயம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனையும் ஆகம நூல் சிறப்பாகக் கூறியிருக்கின்றது. இறைவன் உருவத் திருமேனியில் நின்று அடியார்களுக்கு அருள்புரியும் இடம் ஆலயம் ஆகும். அதாவது ஆன்மாக்கள் இறைவன் சந்நிதியை அடைந்து பக்தியுடன் ஒடுங்கும் தன்மையைப் பெறுவதால் ஆலயம் என்று கூறப்படுகின்றது.

ஆகம விதிப்படி ஆலயத்தை அமைத்து அவரவர் விரும்பும் உருவத் திருமேனியை ஸ்தாபித்து மஹா கும்பாபிஷேகம் செய்து வழிபடுகிறார்கள். அநாதிமல முத்தராகிய சிவபெருமான் அநாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையினால் அனுக்கிரகம் செய்ய சர்வதேவதா சுரூபமாகிய கும்பத்தில் பூஜித்து அபிஷேகம் செய்தலே கும்பாபிஷேகம் ஆகும். இதனைப் பிரதிஷ்டை திருக்குட நன்னீராட்டு, குட முழுக்கு என்றும் கூறுவார்கள். இக்கிரியையின் போது குடத்தில் நிரப்பப்பட்ட புனித நீரால் இறைவனின் திருவுருவத்திற்கு நிகழ்த்தப்படும் நீராட்டுதல் சிறப்பம்சமாகும். இக் கும்பாபிஷேகக் கிரியையானது இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒரு வழிப்படுத்தி எழுந்தருளி நிலை நிற்கச் செய்யும் செயலைக் காட்டுகின்றது.

கும்பாபிஷேகக் கிரியை அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நான்கு வகைப்படும். ஆலயம் இல்லாத ஓரிடத்திலே ஆகம விதிகளுக்கமைய புதியதொரு ஆலயம் அமைத்து அங்கு இறைவனை மூர்த்தி வடிவில் பிரதிஷ்டை செய்தல் அநாவர்த்தனப் பிரதிஷ்டை எனக் கூறப்படுகிறது. ஆவர்த்தனப் பிரதிஷ்டை என்பது முன்பு இருந்த ஆலயம் முற்றாய் அழிந்து விட்டால் அவ்விடத்தில் மறுபடியும் ஓர் ஆலயத்தை ஆகம விதிப்படி அமைத்து கும்பாபிஷேகம் செய்தலாகும். புனராவர்த்தனப் பிரதிஷ்டை என்பது நித்திய, நைமித்திய கிரியைகள் முறைப்படி நடைபெற்று வரும் ஆலயங்களில் விமானம், கோபுரம், மண்டபம், பிரகாரம், ஆலய விக்கிரகங்கள் ஆகியவற்றில் எவையேனும்

வெடித்தோ, பிளந்தோ அல்லது விக்கிரகங்களில் அங்கக்குறைவு, வர்ணப்பூச்சு மங்கியிருத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பழுதடைந்த கட்டடங்களை முன்போல் அழகாகவும் பலம் வாய்ந்ததாகவும், திடமானதாகவும் செய்வதே புனராவர்த்தனப் பிரதிஷ்டையாகும். அந்தரீத பிரதிஷ்டை என்பது பல காலத்திற்கு முன்பு அமைக்கப்பட்ட ஆலயத்திற்குத் தொடர்ந்து நித்திய, நைமித்திய கிரியைகள் நடைபெறும் போது எதிர்பாராதவாறு தீயினால் பாதிப்புறுதல், காடு படர்தல், மண்மாரி ஆகியவற்றால் தடையேற்படுமிடத்து அதனை நிவர்த்தி செய்து நிகழ்த்தும் பிரதிஷ்டை யாகும். ஆலயத்ினுள் மரணம் நிகழ்தல், கள்வர் முதலிய ஆசாரக் குறைவுடையோர் நுழைதல் போன்ற காரணத்தால் செய்யப்பட வேண்டிய பிரதிஷ்டை அந்தரீத பிரதிஷ்டையாகும்.

கும்பாபிஷேகம் நிகழ்த்துவதற்கு முன்னோடியாக இடம் பெறுவது ஆலய நிர்மாணம் அல்லது புதுப்பித்தல் ஆகிய திருப்பணி ஆகும். இதனைத் தொடர்ந்து இடம் பெறுவது கும்பாபிஷேகம் நிகழ்வதற்கான முகூர்த்த நிர்ணயமாகும். இக் கிரியைக்குரிய சுபமுகூர்த்தம் மக்களுக்கும் கிராமத்திற்கும் நலத்தைத் தருவதாக அமைய வேண்டும். யாகசாலை அமைத்து குண்டங்களை நிர்மாணித்தல் அடுத்து இடம்பெறும் முக்கிய பணிகளாகும். பஞ்ச குண்டம், நவகுண்டம், சப்த தசகுண்டம் (பதினேழு குண்டம்), பஞ்ச விம்ச குண்டம் (இருபத்தைந்து குண்டம்), திரவியஸ் திரிம்ச குண்டம் (எண்பத்து மூன்று குண்டம்), என்ற எண்ணிக்கையில் வசதிக்கேற்ப குண்டங்களை யாகசாலையில் அமைக்கலாம்.

கும்பாபிஷேகம் இடையூறின்றி நிகழ விநாயகப் பெருமானை நினைத்து நிகழ்வது கணபதி ஹோமம், இதனைத் தொடர்ந்து ஆசாரியாரைத் தேர்ந்தெடுத்தல் இடம்பெறும். இதனை ஆசாரிய வர்ணம் எனக் கூறப்படும். திரவிய யாகம், அனுஞ்ஞை, கிராம சாந்தி, பிரவேச பலி, ரஷோகண ஹோமம், திசா ஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், வாஸ்து சாந்தி, நவக்கிரக மகம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், ஜலாதிவாசம், தான்யாதி வாசம், நபனோன் மீலனம், கிராமப் பிரதிஷ்ணம், அக்கினி கார்யம், நாமகரணம், பிம்பபிரக்ஷிணம், பிம்பஸ்தாபனம், அஷ்ட பந்தனம், எண்ணெய்க் காப்பு, பிம்பசுத்தி, கும்ப உத்வாசனம், ஸ்தூபிஸ்தாபனம், இலிங்கத்திற்கு தவறு தகல்பணம், ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், மகாபிஷேகம், தீபாராதனை மண்டல பூசை, மண்டல பூர்த்தி ஆகியவை கும்பாபிஷேகத்தின் முக்கிய கிரியைகளாகக்

கொள்ளப்படுகின்றன. இக் கிரியையின்போது வேதமோதல், திருமுறையோதல், நாத உபாசனை முக்கியமானவை. கும்பாபிஷேகக் கிரியையினால் திருக்கோயிலும் சூழலும் புனிதமடைவது போன்று அதில் ஈடுபடும் அனைவரது உள்ளங்களும் நிறைவு பெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் நிறைவேறிய பின் இறைவன் ஆலயத்தில் சாற்றித்தியம் பெற்று அடியவர்களின் பக்திக்கு உரியவனாகின்றான். தெய்விகம் பொலிவு பெற்று விளங்கும் இறைவனுக்கு பல்வகை உபசாரங்களும், அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை, தோத்திரம் போன்றவையும் முறையாக இடம்பெறுவனவாகும். இதன்பின் அஷ்டபந்தனம், சாத்திய தோஷ நிவாரணத்தின் பொருட்டும் கும்பாபிஷேகம்செய்தபயனைஅடைவதன்பொருட்டும் செய்யப்படுவதே மண்டலாபிஷேகமாகும். ஒரு மண்டலம் 45 நாட்களைக் கொண்டது. மேலும் 48, 45,24,15,12, 10 என்ற மண்டலாபிஷேகத்தை அரைவாசி, கால்வாசி என்ற கணக்கிலும் செய்யலாமெனக் கூறப்பட்டுள்ளது. மண்டலாபிஷேகம் சங்காபிஷேகத்துடன் பூர்த்தியடையும்.

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவனை சாதாரண காலங்களில் தரிசிப்பவர்களுக்கு ஒரு மடங்கு பலனும் சாம்பவ திஷாயாகிய உற்சவங்களில் தரிசிப்பவர்களுக்கு ஆயிரம் மடங்கு பலனும், கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பவர்களுக்கு இலட்சம் மடங்கு பலனும் அளிப்பதாகக் காரணாகமம் கூறுகின்றது. உற்சவங்களிலும் பார்க்க கும்பாபிஷேக காலத்தில் யாக பூசை, ஹோமம் கூடுதலாலும் ஆன்ம கோடிகள் உள்ளங்களில் விசேட அன்பு, ஆர்வம், தெய்வ பக்தி, கூடுதலாலும் கும்பம் அக்கினியாகேஸ்வரன், சிவாச்சாரியாரின் இருதயம், அடியார்களின் உள்ளம் முதலான 5 இடங்களில் சிறப்பான வழிபாடு நடைபெறுவதாலும் இலட்சம் கோடி இறையருள் படிவதாக காரணாகமம் கூறுகின்றது. இவ்வாறு காணுதற்கரிய கும்பாபிஷேகங்கள் எங்கு நடைபெற்றாலும் அங்கு சென்று நடைபெறுகின்ற கிரியைகள் யாவற்றையும் தரிசித்து வழிபட்டு பின், கும்பாபிஷேகத்தை வெகு சிறப்பாக நடாத்திய சிவாச்சாரியார்களை வணங்கி அவர்களிடமிருந்து திருவருள் பிரசாதம் பெற்று வளமுடன் வாழ்வோம்.

**செ. கணேசதாஸ்** BA, PGDE, PGDLIS
*ஆசிரியர், நாகர்கோவில்*

# சிலப்பதிகாரச் செய்தி

சிலப்பதிகாரம் 1800 ஆண்டுகளுக்கு முன் நடந்த கதை. நெஞ்சை அள்ளும் இக்கதையினைச் செவியுற்ற இளங்கோ அடிகளால் பாடப்பட்ட இந்நூல் மூவேந்தரையும் அவர் ஆண்ட நாடுகளையும் இணையச் செய்து குடிமகள் கண்ணகியை காப்பியத் தலைவியாகக் கொண்டு பாடப்பட்ட பெருமையுடைய காப்பியம் என்பது ஆன்றோர் கருத்து.

ஒரு நாள் மாலையில் மதுரைநகரத்தின் ஒரு பகுதியில் ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டது. இந்தக் ஊரில் கற்புடைய பெண்கள் இல்லையா? அருளுடைய சான்றோர் இல்லையா? அறம் காக்கும் தெய்வமும் இல்லையா? என்று அழுது அரற்றுவது கேட்டது. வெளியூரிலிருந்து கணவனோடு மதுரை நகருக்கு வந்தவள் அவள். அன்று மாலையில் கணவனுடைய உடல் வெட்டுண்டு புழுதியில் கிடப்பதைக் கண்டு அலறினாள், அழுதாள், அரற்றினாள், சிறிது நேரத்தில் அந்தப் பழம் பெருமை வாய்ந்த நகரம் தீப்பற்றி எரிந்தது, துயரமே உருவாக அவள் அந்த நகரத்தை விட்டு நாட்டையும் கடந்து சென்றாள். நெடுந் தொலைவு நடந்து ஒரு குன்றின் மேல் ஏறி வேங்கை மரத்தடியில் நின்று கணவனை நினைத்து ஏங்கினாள். அங்கே அவளுடைய வாழ்க்கை முடிந்தது. இதைக் கண்டவர்கள் மருண்டார்கள், வியந்தார்கள், கேட்டறிந்த வேந்தன் கற்புத் தெய்வம் எனப் போற்றினான். கோயில் எழுப்பி வழிபட்டான். இது தான் கண்ணகி எனும் வீர மங்கையின் உலகறிந்த வாழ்வு. வாழ்மனையை விட்டு வெளிவந்த பின் சில நாள் வாழ்ந்த வாழ்வு இதுதான்.

### திருமணம்

கண்ணகி பிறந்த ஊர் சோழநாட்டுத் தலைநகராக விளங்கிய காவிரிப் பூம்பட்டினம், பிறந்தகுடும்பம் அந்த நகரத்தில் வண்மையாலும் வணிகத்தாலும் புகழ் பெற்று விளங்கிய மாநாயகன் குடும்பம். புகுந்த குடும்பம் அதே நகரத்தில் அரசு மதிக்கும் செல்வச் சிறப்போடு வாழ்ந்த மாசாத்துவான் குடும்பம். அழகிலும் பண்பிலும் சிறந்தவள் என்று மகளிர் எல்லாரும் தொழுது ஏத்துமாறு விளங்கிய அவள் அழகும் புகழும் மிக்க கோவலனுக்கு வாழ்க்கைத் துணைவி ஆனாள்.

### இல்வாழ்க்கை

கோவலனும் கண்ணகியும் காதலராய் உள்ளம் கலந்து வாழ்ந்தனர். உலகமெல்லாம் ஒளி பரப்பி உதவும் ஞாயிறும் திங்களும் ஒருங்கே விளங்கியது போல் காதலனும் காதலியும் விளங்கினர். கோவலன் கண்ணகியிடம் அளவற்ற அன்பு -

தீராக்காதல் கொண்டான். விருந்தோம்பல், சுற்றம் தழுவுதல், அறவோர்க்கு அளித்தல் ஆகிய இல்லறக் கடமைகளைத் தாமே செய்து சிறப்புறுமாறு கண்ணகியையும் கோவலனையும் முறைப்படி தனிக்குடும்பமாக்கி வைத்தனர் பெற்றோர்.

## மாறுதல் நேர்ந்தது

காதலனைப் பிரியாமல் தழுவும் கைநெகிழாமல் தீதின்றி வாழ்க என்று திருமணத்தில் வாழ்த்தியபடி அவர்கள் இனிது வாழ்ந்து சில ஆண்டுகள் தான் கோவலனுடைய தீராக்காதல் ஒருநாள் மாறியது.

காவிரிப்பூம்பட்டினத்தில் கணிகையர் குடும்பத்தில் பிறந்து ஆடல், பாடல்களோடு அழகையும் ஒரு கலையாகப் பயின்று கலைச் செல்வியாக வளர்ந்து விளங்கிய மாதவியின் உறவு கோவலனுக்கு ஏற்பட்ட நாள் கண்ணகியின் வாழ்க்கையில் கவலை புகுந்த நாளாகும். கண்ணகியிடம் கோவலன் கொண்டிருந்த தீராக்காதல் அன்று முதல் மாதவியிடம் மாறியது. அன்புருவான அவனுடைய நெஞ்சம் குற்றம் அற்ற மனைவியை மறந்தது; வீட்டையும் மறந்தது.

"விடுதல் அறியா விரும்பினன் ஆயினன்

வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்தென்" என்கின்றார் இளங்கோ அடிகள். கண்ணகியினுடைய இல்லறம் வாடியது. இல்லறத்தின் பண்புகளை இழந்தாள், தன்னுடைய அழகிய அம்சங்களைத் தொலைத்தாள், உறவினர்கள் முன் புன்முறுவலோடு வாழ்ந்தாளாயினும் தனிமையில் கண்ணீர் விட்டு கலங்கியே ஒவ்வொரு நாளும் கழித்து வந்தாள். இவ்வாறு பல தினங்கள் அல்ல பல ஆண்டுகள் கழிந்தன.

மீண்டும் கோவலன் கண்ணகியிடம் வருகின்றான். தன் துணைவியின் வாடிய மேனியைக் கண்டு அவளுடைய வருத்தத்தைக் கண்டு வருந்தினான். வஞ்சனையும் பொய்யையும் வாழ்வாகக் கொண்டவளோடு இவ்வளவு காலம் கழித்தமையால் முன்னோர் தேடிக் கொடுத்த செல்வத்தை அழித்து விட்டேன். எனக் கவலை கொண்டான். கண்ணகி வருத்தக் குறிப்பு இல்லாது புன்முறுவலோடு; சிலம்புகள் உள்ளன அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள் என்றாள். பின்னர் இருவரும் சிலம்பை விற்று வணிகம் செய்து இழந்த செல்வத்தை மீட்கும் நோக்குடன் மதுரை நகர் செல்கின்றனர்.

## சிலம்பு விலை கூறல்

கண்ணகியை தோழி மாதரியின் வீட்டில் விட்டுவிட்டு கடைத்தெருவிற்கு சிலம்பு விற்பதற்காக கோவலன் செல்கிறான். அங்கே பொற்கொல்லன் ஒருவனைக் கண்டான்.

இவன் பாண்டியனின் அரண்மனைக் கொல்லனாக இருக்கக்கூடும் எனக் கருதி அவனை அணுகி பாண்டியன் தேவிக்குப் பொருத்தமான காற்சிலம்பு உள்ளது எனக்கூறி சிலம்பு வைத்திருந்த முடிச்சை அவிழ்த்துக் காட்டினான். துரதிஷ்டவசமாக அரண்மனைச் சிலம்பைத் திருடிய பொற்கொல்லனுக்கு கோவலன் விடயத்தைச் சொன்னதும் தான் சிலம்பைத் திருடிய செய்தி வெளிவருவதற்கு முன்னர் கோவலனை கள்வனாக்குவதற்குத் திட்டமிட்டு வெற்றியும் கண்டான். அரண்மனைச் சிலம்பைத் திருடிய கள்வன் அகப்பட்டுக் கொண்டான் என்ற செய்தி பொற்கொல்லனால் பாண்டிய மன்னனுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. ஆடல் பாடல் முடிந்து கோப்பெருந்தேவியுடன் ஊடல் கொள்வதற்காக ஏவல் பெண்களோடு சென்று கொண்டிருந்தபோது பொற்கொல்லன் விடயத்தைத் தெரியப்படுத்தியதும் சிறிதும் சிந்திக்காமல் காவலரை அழைத்து அரசியின் காற்சிலம்பு அந்தக் கள்வன் கையில் இருந்தால் அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக என்று கட்டளையிட்டான். அதன்படி குற்றமற்ற கோவலன் வாளினால் வெட்டிச் சாய்க்கப்பட்டான். மண்மகள் துயருற்றாள். செய்தி அறிந்த கண்ணகி தீராத்துயர் கொண்டாள்.

"பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும் சேண்நிலம் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள் தன் கேள்வனை

எங்கணா என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்" என்று கூடியிருந்த ஆய்ச்சியர் எல்லோரையும் பார்த்து முறையிட்டாள். வானத்தை நோக்கிச் சூரியனை விளித்தாள்.

"காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்? என்று அலறினாள். அதற்கு மறுமொழி கூறுவதுபோல், உன் கணவன் கள்வன் அல்லன்; கள்வன் என்று கொன்ற இந்த ஊர் தீப்பற்றி அழிந்து விடும்" என்று ஒரு குரல் கேட்டது.

கோவலன் உடலைக் கண்டு பலவாறாக அழுது புலம்பியவள் கண்ணைத் துடைத்துக் கொண்டு பாண்டியனுடைய அரண்மனை வாயில் முன் சென்றாள். வாயிற் காவலன் உள்ளே அழைத்துச் சென்றான். கண்ணகியைக் கண்டதும் நீர் பொழியும் கண்களோடு எம் முன்னிலையில் வந்த நீ யார்? என்றான் பாண்டியன். தேர்ந்து நீதி செலுத்தாத மன்னவா! நீதி முறைக்காக உடம்பையும், உயிர் போன்ற மகனையும் கொடுத்து அறம் காத்த மன்னர்கள் ஆண்ட காவிரிப்பூம் பட்டினம் என் ஊர். மாசாத்துவானுக்கு மகனாகி, வாழவிரும்பி ஊழ் வினையின் காரணமாக உன் நகருக்குள் புகுந்து என் காற்சிலம்பை விற்க முயன்று உன்னிடம் கொலைக்கு ஆளான கோவலனுடைய

மனைவி நான்; என் பெயர் கண்ணகி என்று வேந்தன் உள்ளம் சுடுமாறு கூறினாள். கேட்ட வேந்தன் கலங்கிய உள்ளத்தனாய், பெண் அணங்கே! கள்வனைக் கொல்வது கடுங்கோல் ஆகாது. அரசநீதி அது என்றாள். உடனே கண்ணகி நன்மையை ஆராய்ந்து உணராத வேந்தே! என் கணவன் கள்வன் அல்லன் எனக் காட்டுவேன் இதோ என் காற்சிலம்பில் உள்ளது மாணிக்கம் என்றால், அப்படியாயின் அதுவே நல்லவழி எம் சிலம்பில் உள்ளது முத்து என்று வேந்தன் கூறி அதைக் கொண்டு வரச் சொல்லி அவள் முன் வைத்தான். கண்ணகி உடனே தன் காற்சிலம்பை உடைத்தாள். அதிலிருந்து மாணிக்கம் தெறித்து வீழ்ந்தது. அதனைக்கண்ட வேந்தன் குடை தாழ்ந்தவனாய் செங்கோல் தளர்ந்தவனாய் பொற்கொல்லன் சொல் கேட்டு நீதி வழுவிய யானோ அரசன்? கோவலன் கள்வன் அல்லன்; யானே கள்வன். தென்னாட்டு ஆட்சிமுறை என் காலம் தொடங்கிக் கெட்டுவிட்டதே. கெடுக என் ஆயுள் என்று மயங்கி வீழ்ந்தான்.

மதுரை நகரத்து மாதர்களே! மைந்தர்களே! கடவுளரே! தவத்தோரே! கேளுங்கள். என் காதலனுக்குத் தீங்கு இழைத்த வேந்தனுடைய இந்த ஊரின் மேல் சீற்றம் கொண்டேன். யானோ ஒரு குற்றம் அறியேன் என்று கொதித்தாள். அவள் உள்ளத்தின் கொதிப்பு ஊரைச்சுடும் நெருப்பு ஆயிற்று. ஊர் நெருப்புக்கு இரையாயிற்று, பதின்நான்காம் நாள் மதுராபதித் தெய்வத்தின் வாக்குக்கு இணங்க தேவர்கள் தன் பெயரை வாழ்த்திப் புகழ்ந்து மலர்மாரி பெய்து போற்ற கோவலனோடு வானவூர்தி ஏறிச் சென்றாள் கண்ணகி.

சோழ நாட்டில் கண்ணகி பிறந்து வாழ்ந்து வருந்தினாள். பாண்டிய நாட்டில் பெருந்துயருற்றுப் புலம்பிப் போராடினாள். சேரநாட்டில் சேர்ந்து அமைதியுற்று புகழுருப்பெற்றாள்.

சிலப்பதிகாரம் மூன்று விடயங்களை அழுத்தி உரைக்கின்றது.

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.

2. உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர்.

3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் எனும் தொடரிலுள்ள அரசியல் எனும் சொல்லானது அரசியல் விஞ்ஞானத்தையோ அதனோடு தொடர்புடைய பொருளையோ குறித்து வந்ததல்ல. இங்கு அரசியல் என்பது நீதியை, அறத்தைக் குறித்து நிற்கின்றது. இது சிறப்பாக அரசனுக்குச் சொல்லப்பட்ட அறமானாலும் பொதுவாக தனி மனிதனுக்கும் சொல்லப்பட்ட அறமாகவே கொள்ள வேண்டும்.

எனவே அறம் பிழைத்தவர்களைக் காத்தலைச் செய்யும் அறக்கடவுளே கூற்றாக நின்று அழிக்கும் வரபலத்தினால் ஆணவத்துடன் நடந்த இரணியனை அறமானது நரசிங்க வடிவமாகக் கூற்றாக வந்து குடலைக் கிழித்துக் கொன்றது. இந்தக் கோரக் கொலையைத் தூண்டிய சத்தி அவன் வயிறுக்கரு பிரகலாதன்.

நெடுஞ்செழியனைக் கொன்றது யார்? யாரும் கொல்லவில்லை பொன் செய் கொல்லன், தன் சொல் கேட்ட யானோ அரசன், யானே கள்வன் கெடுக என் ஆயுள் எனத் தன் குற்றம் உணர்ந்த செழியன் தற்கொலை செய்து கொண்டான்.

## ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

ஊழையும் உப்பக்கம் காண்பர் எனும் விதிக்கேற்ப அரசு துறந்து துறவியாக விதிக்கு விதி செய்த பேராண்மை படைத்த இளங்கோ பாண்டியன் அரசியல் பிழைத்தமைக்கு ஊழே காரணம் என்றும் உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவதற்கு ஊழே காரணம் என்றும் கன்மக் கோட்பாட்டினையே சிலம்பின் ஒப்பற்ற ஒரு பரலாக உள்ளமைத்தார் எனக் கொள்வதும் ஏற்றதே.

## மதுரையை எரித்தது முறையா?

தனிமனிதனுக்கு விதி இருப்பது போல் சமுதாயத்துக்கும் விதி உண்டு. ஒருவன் தீமை புரியாது வாழக்கூடும். அதனால் மட்டும் அவன் அறத்தில் நிறைவுடையவன் அல்லன். தீமை நடப்பதை எனக்கென்ன என்று எதிர்க்கத் தயங்கியவனும் அறம்தவறியவனேயாவான். துரோணர், பீஷ்மர் முதலியோர் அம்புப்படுக்கையில் பலநாட்கள் வேதனைப் பட்டமைக்கு காரணம் பாஞ்சாலியின் துகில் உரியும்போது வாளா இருந்தமையே. வேள்வி தவங்கள் மிகப்புரிந்த வேதியரும் வெஞ்சினங் கொள்ளாது வீற்றிருந்தனர். இராவணனை எதிர்க்க திராணி இல்லாத போதும் ஒரு பெண்ணின் அவலக்குரலைக் கேட்ட சடாயுபறவை அறத்துக்காகப் போராடி மரண சுகம் அடைந்தது. மதுரை மக்களும் கோவலனின் கொலையில் வாளா இருந்தமையால் அந்த ஊழ்வினை மதுரையையே எரித்தது. எனவே சிலப்பதிகாரம் கூறும் அருங்கருத்துக்களை உள்வாங்கி வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

**த. குருபரன்** (HN.Dip in Acc)
செயலாளர்
பூர்வீக நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை
நாகர் கோவில்.

உ

சிவமயம்

கண்ணகாதேவி துணை

# நாகர்கோவில் கண்ணகை அம்மன் ஆலய வரலாறும் பொங்கல் விழா முறைமையும் கோவலர் கதை பற்றிய சில தகவல்களும்.

இலங்கைத் திருநாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் கிராமத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தின் வடபாலுள்ள வெண்மணல் பிரதேசத்தில் மாளிகைத் திடல் என்னும் காணியில் ஆல், அத்தி, அரசு, வேம்பு, நாவல், கொக்கட்டி, இலுப்பை ஆகிய மரங்கள் செறிந்து விளங்கும் சோலையின்கண் இக்கண்ணகை அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தின் தல விருட்சம் ஆலமரமாகும்.

கிழக்கே சுடலைப்பிட்டிப் பிள்ளையார் ஆலயமும், குடாரப்பு முருகமூர்த்தி ஆலயமும், தெற்கே வரலாற்றுச் சிறப்புமிக்க நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயமும், மேற்கே பெரியதம்பிரான், வீரபத்திரர் ஆலயங்களும், வடக்கே நரசிங்க வைரவர் ஆலயமும் அமைந்துள்ளன.

**நாகர் கோவில் கண்ணகை அம்மன் ஆலய தோற்றம்**

இற்றைக்கு ஏறக்குறைய 250 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் பூசகராக இருந்த இரகர் சிதம்பரர் என்பவர் ஒருநாள் ஆலயப் பூசையை முடித்துக்கொண்டு ஆலயத்தின் வடக்குத் திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் அங்குள்ள மரச்சோலையில் ஒரு நாவல் மரத்தின் கீழ் வெள்ளை நிறச் சேலை அணிந்த ஒரு வயோதிபமாது நாவல் பழங்கள் பொறுக்கி சாப்பிட்டுக் கொண்டிருந்ததாகவும், பூசகரைக் கண்டதும் "தம்பி நான் வற்றாப்பளைக்குச் செல்ல வேண்டும், நான் நன்கு களைப்படைந்துள்ளேன், எனவே என்னால் உடனடியாகப் பிரயாணம் செய்ய இயலாதுள்ளது. ஆகையால் ஒரு எட்டு நாட்கள் நான் இங்கு தங்கிச் செல்வதற்கு எனக்கு நீ ஆதரவு தருவாயா" என்று கேட்டதாகவும் அதற்குப் பூசகர் ஆம் அம்மா என்னுடன் எனது வீட்டிற்கு வாருங்கள் என்று கேட்டதாகவும்

அதற்கு அவ்வயோதிப மாது; என்னால் நடக்க இயலாதுள்ளது நான் இந்த கொக்கட்டி மரநிழலில் இருக்கின்றேன். நீ எனக்கு நீரும், ஏதாவது ஆகாரமும் கொண்டு வந்து தரும்படி கேட்டதாகவும் அதனை ஏற்றுக்கொண்ட பூசகர் வீட்டிற்குச் சென்று ஆகாரமும் நீரும் கொண்டு வந்து பார்த்தபோது அந்த வயோதிப மாது அவ்விடத்தில் இருக்கவில்லை எனவும், அம்மாது இருந்த இடத்தில் ஒரு சிலம்பும், ஒரு அம்மானையும் இருந்ததாகவும் இது அம்மனின் திருவருள் என உணர்ந்த பூசகர் அந்த இடத்தில் பீடம் அமைத்து அதில் சிலம்பையும் அம்மானையையும் வைத்துப் பூசை செய்ததாக எம் முன்னோரின் குறிப்புகளிலிருந்து அறிய முடிகின்றது.

கோவில் பதிவேடுகளின்படி இந்த சிதம்பரரின் மகனான இரகர் என்பவர் கொட்டிலாக இவ்வாலயத்தை அமைத்து இதன் பூசகராகவும, ஆலய பரிபாலகராகவும் இருந்துள்ளார். அக்காலத்தில் இச் சிதம்பரர் இரகர் என்பவரே நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தின் பூசகராகவும் பரிபாலகராகவும் இருந்துள்ளார். சிதம்பரர் இரகர் காலமானதும் இவரின் மகளின் மகன் முருகேசு சதாசிவம் 1924 ஆம் ஆண்டு முதல் 1933 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாகதம்பிரான் ஆலயப் பூசகராக இருந்ததுடன் தனது பெரிய தகப்பனாரான ஆறுமுகம் கணபதிப்பிள்ளையின் (உடையார்) வழிகாட்டலில் நாகர்கோவில், குடாரப்பு மக்களின் உதவியுடன் கொட்டிலாக இருந்த கண்ணகை அம்மன் ஆலயத்தினை மண்சுவரினால் கட்டி, இவ்வாலயத்தின் பூசகராகவும் பரிபாலனகர்த்தாவாகவும் இருந்து கண்ணகை அம்மனின் பணியினை மேற்கொண்டு வந்துள்ளார்.

முருகேசு சதாசிவம் 1933 ஆம் ஆண்டு காலமானதைத் தொடர்ந்து அவரின் மகன் ஆசிரியர் வல்லிபுரநாதர் இவ்வாலயத்தின் பரிபாலனகர்த்தாவாகவும் பொங்கல் காலம் எட்டு நாட்களும், இடைப்பொங்கல் நாட்களிலும் பூசகராகவும் 1933 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை 54 வருடங்கள் அம்பாளின் கைங்கரியங்களை மேற்கொள்ளுகின்ற பெரும் பேறினைப் பெற்றுள்ளார். இவரின் காலத்தில் நாகர்கோவில், குடாரப்பு, நாகர்கோவில் வடக்கு மக்களின் உதவியுடன் ஆலயக் களிமண் கட்டடத்தினை சீமெந்துக் கற்களால் கட்டுவித்து பஞ்சலோகத்தினால் செய்யப்பட்ட கண்ணகை அம்மன் திருவுருவை, காலயுத்தி வருடம் சித்திரை மாதம் 14ஆம் திகதி (27.04.1978) மூல நட்சத்திர நாளில் ஸ்தாபனம் செய்து மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்காலத்துக்கு முன்னர்

இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக விளங்கியது மூன்று சிலம்புகளும், மூன்று அம்மானையும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலய பரிபாலனகர்த்தாவும், பூசகருமாகிய முருகேசு சதாசிவம் வல்லிபுரநாதருக்கு தில்லைநாதன், பத்மநாதன், கணேசநாதன், சிவயோகநாதன், சிவசக்தி, சோதிநாதன், லோகநாதன் என ஏழு பிள்ளைகள் உள்ளனர். இவர்களுள் தனது இரண்டாவது மகன் பத்மநாதன் அவர்களிடம் தனது வயோதிப காலத்தில் 1988 ஆம் ஆண்டு கோவில் நிர்வாகம், விழாக்காலப்பூசை என்பவற்றை ஒப்படைத்து மேற்பார்வையைச் செய்துவந்தார். 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி வல்லிபுரநாதர் அவர்கள் காலம் சென்றதன் பின்னர் திரு.வ. பத்மநாதன் ஆலய நிர்வாகப் பொறுப்பு, விழாக்காலப் பூசகர் பொறுப்பு யாவற்றையும் ஏற்று கோவில் நிர்வாகத்தை மேற்கொண்டு வரும் காலத்தில் 2000 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக நாகர்கோவில், குடாரப்பு மக்கள் இடம் பெயர்ந்து சென்றதனைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு வரை கோவிலில் எதுவித பூசைகளும் இடம் பெறவில்லை. இவ்வாலயப் பிரதேசத்தில் இராணுவத்தினர் முகாம் அமைத்திருந்தனர். 2009 ஆம் ஆண்டு திரும்பவும் ஆலயத்திற்குச் செல்வதற்கு அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து வழமைபோல் பூசைகள் விழாக்கள் எல்லாம் நடைபெற்று வந்ததுடன்; ஆலயம் 2013 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி (14.07.2013) பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. முதல் இரண்டு மண்டபங்களும் வைரக்கல்லால் அமைக்கப்பட்ட நான்கு மண்டபங்கள் கட்டி நிறைவடைந்து ஜய வருடம் ஆவணி மாதம் 15 ஆம் நாள் (31.08.2014) சுவாதி நட்சத்திரம் கூடிய சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக் கும்பாபிஷேகக் கிரியைகளை நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சிவசண்முகக் குருக்கள் மேற்கொண்டதுடன் எஜமானாக திரு. வல்லிபுரநாதர் அவர்களின் மூத்த மகன் திரு. தில்லைநாதன் அவர்கள் கிரியைகளில் பங்கு கொண்டார்.

**ஆலய விழாக்களும், நடைபெறும் முறைமையும்:**

திங்கட்கிழமைகளில் பூசைகள் நடைபெறும். இவ்வாலயத்தில் வருடாந்தப் பொங்கல் மிகவும் சிறப்பான விழாவாகும். வைகாசி மாதத்தில் நடைபெறுவதால் இதனை இவ்வூர் மக்கள் வைகாசிப் பொங்கல் என அழைப்பர். ஒவ்வொரு வருடமும் வருகின்ற வைகாசி மாத பௌர்ணமி நாளுக்கு அண்மித்த திங்கட் கிழமைக்கு முந்திய திங்கட்கிழமை இப் பொங்கல் விழா நடைபெறும். அதற்கு முதல் திங்கள் பொங்கல் விழாக்கால ஆரம்பநாளாகும்.

இந்நாளினை கும்பம் வைப்பு, காப்புச் சொல்லல், விளக்கு வைத்தல் எனப் பலவாறு அழைப்பர். இந்நாளில் பூசகர் வீட்டிலிருந்து பூசகரும் புத்தக நியமகாரரும் இன்னும் உதவியாளர்களும் ஏனைய முக்கியமான அம்மன் அடியார்களும் பூசைப் பொருட்கள், கும்பம் வைப்பதற்கு உபயோகிக்கும் பச்சை அரிசி, கோவலர்கதை ஏடு ஆகியவற்றுடன் ஆலயத்தை வந்தடைவர். புத்தக நியமகாரர் என்பவர் விழாக்காலத்தில் பூசகருக்கு அடுத்த முக்கியமானவர். இவரே ஆலயத்தின் பல முக்கியமான வேலைகளை நிறைவேற்றுவதுடன் பூசை நேரத்தில் பஞ்சபுராணம் ஓதுதல் பூசை நிறைவடைந்து கோவலர் கதை படிக்கும் போது முதலில் ஏட்டினைப் பூசகரிடம் பெற்று பூசகருடன் சேர்ந்து காப்புச் சொல்லுதல் போன்ற கடமைகளையும் செய்வர்.

ஆலயத்தை வந்தடைந்த பூசகரும் ஏனையோரும் தங்கள் தங்களுக்குப் பொருத்தமான கடமைகளான மேற்கட்டி கட்டுதல், தோரணம் கட்டுதல் போன்ற வேலைகளுடன் பூசைக்கு வேண்டிய நிவேதனப் பொருட்களைத் தயார் செய்ய பூசகர் அதற்குரிய உதவியாளரின் உதவியுடன் விநாயகர், மூல மூர்த்தி அம்மன், நாகதம்பிரான், வைரவர், காத்தவராயர் ஆகிய தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்வார். இந்நேரத்தில் அம்மனின் எட்டுநாள் விரதம் அனுட்டிக்கின்ற அம்மன் அடியார்கள் ஆலயத்தை வந்தடைவர். அபிஷேகம் நிறைவடைந்ததும் கும்பம் வைத்தல் ஆரம்பமாகும். ஆலயத்தின் மூன்றாம் மண்டபத்தில் தாம்பாளத்தில் பச்சை அரிசி பரப்பி அதன்மேல் பத்ததியில் குறிப்பிட்டுள்ள அம்மன் யந்திரத்தினை வரைந்து அவ்வியந்திரத்தின்மேல் கும்பத்தினை வைத்து மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற சிலம்புகளில் சிறிய சிலம்பினைக் கொண்டு வந்து பூசகர் கும்பத்தின் மேல் வைப்பார். பத்ததி என்பது முற்காலத்தில் அம்மனின் அருள்பெற்ற அருளாளர் ஒருவரினால் பொங்கல் காலத்தில் செய்யப்பட வேண்டிய கிரியை முறை அதற்கான யந்திரங்கள் அதற்குரிய மந்திரங்கள் என்பவற்றை பனை ஓலை ஏட்டில் எழுதிவைக்கப்பட்ட முறைமையாகும். இதில் குறிப்பிடப்பட்ட முறைப்படியே பூசை முதலாகிய எல்லாக் கருமங்களும் இவ் எட்டு நாட்களும் நடைபெறுகின்றது. பிரதான கும்பம் வைக்கப்பட்ட பின்னர் கோவலர் கதை படிப்பதற்கான கும்பம் ஆலயத்தின் நான்காவது மண்டபத்தில் நவதானியங்கள் முளைத்து வளரக்கூடியதாக மண்பரப்பிய இடத்தில் நவதானியங்கள் விதைத்து அதன்மேல் மண்ணில் அமர்ந்தவாறு வைக்கப்படும். இந்நேரத்தில் உடுக்கிசைத்துப் பாடக்கூடிய அம்மன் அடியார்கள் ஒன்று சேர்ந்து உடுக்கு இசைத்து கிராமிய இசை அம்சம்

பொருந்திய பக்திப் பாடல்களை இசைப்பர். இப்பாடல்கள் கேட்பதற்கு இனிமையாகவும் பக்திப் பரவசத்தை ஏற்படுத்துவதுமாக அமைந்திருக்கும். இவ்வகையான பாடல்கள் விழா எட்டு நாட்களும் பூசை ஆரம்பமாவதற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டு பூசை நிறைவடையும் வரை நடைபெறும். இதனை நாகர்கோவில் வடக்கினைச் சேர்ந்த அடியார்கள் நீண்ட காலமாகப் பாடி வருவதுடன் ஆரம்பநாளன்று இதற்குரிய பொறுப்பானவரின் உடுக்கு பூசையில் வைக்கப்பட்டு பூசகரினால் உரியவரிடம் கொடுக்கப்படும்.

கும்பம் வைப்பு நிறைவடைந்தவுடன் முதல்நாள் பூசைகள் ஆரம்பமாகி பூசை நிறைவடையும் முன்னர் புத்தக நியமகாரரினால் பஞ்சபுராணம் ஓதப்படும். அதன் பின்னர் கோவலர் கதை ஏட்டினை அதற்குரிய பீடத்துடன் பூசகர் கொண்டுவந்து புத்தக நியமகாரரிடம் கொடுக்க; புத்தக நியமகாரர் பக்தி சிரத்தையுடன் அதனைப் பெற்று கோவலர் கதை படிப்பதற்கென ஒழுங்கு செய்த இடத்தில் ஏட்டைத் தாங்கியுள்ள பீடத்தினை வைத்து ஏட்டின் ஆரம்பப் பகுதியினைப் பிரித்தெடுத்து வணங்கும்படி அமைந்த கையில் வைத்திருக்க கோவலர் கதை படிப்பதற்கான விநாயகர் வழிபாட்டுப் பூசையினை தேங்காய் உடைத்துப் பூசகர் நிகழ்த்துவார். இதனையடுத்து "குணமான கண்ணகையை கோவலனார் தான் மணம் செய்" என்று ஆரம்பிக்கின்ற காப்பு இசைக்கப்பட்டு கோவலர் கதை படிக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் கோவலர் கதை பற்றிய சில தகவல்களைத் தருவது பொருத்தமானதாகும்.

கோவலர் கதை என்பது சிலப்பதிகாரம், காங்கேயப்புலவர் பாடிய கண்ணகி கதை என்பவற்றை அடியொற்றி நாகர்கோவிலுக்கு அயல் கிராமமான குடாரப்புக் கிராமத்தில் வாழ்ந்த வெற்றிவேல் புலவரால் இயற்றப்பட்டதாகும். இதுபற்றி கோவலர்கதை பாயிரத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> வாழ்வு செறி கண்ணகையார் மணிச்சிலம்பின் கதையிதனை
> தாழ்வுசெறி கடல்புடைசூழ் தாரணியின் முன்னொருநாள்
> நாழ்வுசெறி காங்கேச நற்புலவர் பாட்டுடனே
> ஆழ்வுசெறி புகணயினாப் பணிக்கனுமுன்னறைந்தனனே

> அறைந்தவிந்தக் காதைதனை யடிக்கடியே வரைந்ததிலும்
> துறைந்தெழுதுஞ் சிலருடைய சொற்பழுதுண்டதனாலும்
> மறைந்த சில கதைக்குறைகள் வழுவியிருந்ததனாலும்
> குறைந்து சில பாமிகுதி குறிநெடிலுற்றிடலாலும்

உற்றவிந்தக் கதையிதனை யுன்னருளிற் கண்ணகையார்
சொற்றாளே சில பெரியோர் சொல்லிய வுந்தரவாலும்
நற்றபத்தி விருப்பாலு நாடிய சாத்திரத்தாலும்
கற்ற கந்தப்புராணமுடன் காசிகாண்டமுபதேசம்
தேசமென்னுங் காண்டமதுந் தெரிந்தெடுத் தொன்றாய்ந்து
என்பதுடன்

உரைத்த புகட் டென்னிலங்கை யுற்றதொரு தேசமதிற்
துரைத்தனஞ்சேர் யாழ்ப்பாணந் துலங்கு வடகீட் டிசையின்
மருவுகுடாரப்பதெனு மாநகரில் வாழுகின்றோன்
பொருமருவு கந்தர்செய்த புண்ணியமாதவத்தில் வந்தோன்

கொடியார் பலர் கூடியொரு கோளுரைத்துக் கோடேற்ற
நெடியமுடி மன்னரவர் நீழ் வருடம் பன்னாலென்
றுடையசிறை மீதிருந்தங் குத்தமிகண்ணகைமீது
படிபுகழு மோர்பதிகம் பாடிட நாட் பதினாலிற்

துடியிடையிடையாள் கண்ணகைதன் தொல்லருளால் மறியல்
விட்டு
கடியர் மனந்துணுக்கமுறக் கருணைசெறி பதியில் வந்தோன்
அடியன் வெற்றிவேலனெனு மான திருநாமமுள்ளோன்
படியுயர்ந்த கண்ணகைதன் பட்டமுய்த்தவுத்தர வால்

உத்தரவாற் சிலப்பதிகாரக் கதையை யுரைப்பதற்குப்
பத்திபெறு பாயிரத்தை பாடுகெனப் பணித்ததனாற்
சத்தமுறு பன்னலெனுந் தக்கதுறைத் தும்பளையில்
மெத்துபுகழ் காராவார் மேற்குலத்தில் வந்துதித்தோன்.

உதித்த கதிர்காமரரு ளொன்புதல்வன் சங்கரன்றான்
துதித்த விந்த காதைதன்னிற் றொகுதி சில பகுதிகண்டு
மதித்தபுகழ் கண்ணகையாம் மாதருளாற் றமிட்பாவாற்
பதித்தவிந்த காதைதன்னிற் பாயிரத்தை பாடினனே.

மேலும் இக்கோவலர் கதையை இயற்றிய கந்தர் வெற்றிவேலர் என்பவர் தும்பளையில் பிறந்தவர் எனவும் திருமண பந்தத்தின் மூலம் குடாரப்பில் வாழ்ந்தவர் எனவும் சிறந்த கல்வி அறிவுடையவரும் மந்திரவாதி எனவும், குடாரப்பில் அமைந்துள்ள தூவில் கண்ணகை அம்மன் ஆலயத்தின் பூசகராக இருந்த அம்மன் பக்தர் எனவும் அறிய முடிகிறது. இக் கோவலர் கதையானது பன்னிரண்டு கதையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அவையாவன:

1. பாண்டியன் அரசிருக்கை கதை
2. கண்ணகை திருவவதாரக் கதை
3. கோவலர் அவதாரக் கதை
4. தூரியோட்டக் கதை
5. கடலோட்டக் கதை
6. கண்ணகை அம்மன் திருக்கல்யாணக் கதை
7. மாதவி ஆடல் அரங்கேற்று
8. கோவலரைப் பொன்னுக்கு மறித்தல்
9. சிலம்பு கூறல் கதை
10. உயிர் மீட்சி
11. வழக்குரைத்த கதை
12. மதுரைத் தகனக் கதை

இத்தகைய பன்னிரண்டு கதையைக் கொண்ட கோவலர் கதை பொங்கல் விழா எட்டு நாட்களும் படித்தல் இவ்வாலயத்தின் முக்கிய நிகழ்வாகும். திங்கட்கிழமை ஆரம்பிக்கும் விழாவில் திங்கள் தொடக்கம் வியாழன் வரையான நான்கு நாட்களும் காலைப்பூசை, மாலைப்பூசை என இரண்டு நேர விசேட பூசைகளும், ஒவ்வொரு பூசை நிறைவடைந்தவுடனும் காப்புச் சொல்லி, கோவலர்கதை படிக்கப்படும். இந்நான்கு நாட்களில் முதல் ஐந்து கதைகளான பாண்டியன் அரசிருக்கை, கண்ணகை திருவவதாரம், கோவலர் அவதாரம், தூரியோட்டம், கடலோட்டக் கதை என்பன படிக்கப்படும். ஐந்தாம் நாள் விசேடமான நாளாகும். அன்றைய நாளைக் கலியாணப் படிப்பு என அழைப்பர். அன்றைய நாளிலே கோவலருக்கும் கண்ணகைக்கும் திருமணம் நடைபெற்ற வைபவம் படிக்கப்படும். இப்படிப்பு அனேகமாக வெள்ளிக்கிழமை இரவு நடைபெறும். மாலை ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனையும் விசேட பூசையும் நடைபெற்றவுடன் காப்புச் சொல்லப்பட்டு கல்யாணப் படிப்பு ஆரம்பமாகும்.

பூசகரும், புத்தக நியமகாரரும் படிப்பை ஆரம்பிப்பர். ஆரம்பக் கடவுள் வணக்கப் பாடல்கள் சில பின்வருமாறு:

ஐந்துமுகத்தோனருளா லண்டராதியோர்க்காதியாய்
வந்துதித்த வாரணமே வல்வை மணந்தாரணமே
சிந்தையருட் கண்ணகையார் திருமணத்தின் கதையிதனைத்
தொந்தமறப் பாடுதற்குன் றுணைப்பத வாரிசந்துணையே

துணைமருப்பினிருதனத்தின் தோகை வள்ளிநாயகியை
குணமுடனே மணமுடிக்க குமரகுருபரன்றன் முனம்
துணைமருப்பின் மதகயம்போற் றோன்றியவர்க்கருள் புரிந்த
இணைமலரிருபதத்தை யின்றெமக்கு அருளாயே

அருணிறைந்த வருக்கருளே யாரணத்தின் முதற் பொருளே
அருனருளுந் திருமகனே யரிபுகழும் மருமகனே
பரையுமருளுருமுதலாய் பரமகுரு துணைமுதலாய்
வரமருள வருபொருளே வாரணமெய் காரணனே

காரணனே கருத்தறியேன் கண்ணகையின் கலியாணம்
காரணமாய் பாடுதற்குன் கருணைமல ரிருசரணைக்
காரணமாய் கருதுமருள் காட்டியெனக் கூட்டு தமிழ்க்
காரணமாய் வுறக்கருத்தாய்க் கருதுமுன தருளானே

அருளினிறை பரம்பரையே யாறுமுகதேசிகனே
அரியயனே வயிரவனே யையனே செந்திருமகனே
சரசுவதித் தாயாரே தக்கவுங்கள் தாண்மலரை
ஒருபோதும் மறவாமல் ஒருவனுளத் தருளுதவும்

இக்கலியாணப் படிப்பு நடைபெறுகின்ற நன்னாளிலே கோவலர் கதையினை இனிமையாக இசையோடு படிக்கக்கூடியவர்கள் ஆலயத்திற்கு வருகை தருவர். இவர்கள் இருவர் இருவராக இசையோடு படிக்க ஆலயத்திலிருக்கும் அடியார்கள் பக்தி சிரத்தையோடும், ரசனையோடும் அதனைக் கேட்பர். அன்றிரவு முழுவதும் கலியாணப் படிப்பு நடைபெறும் (இக்கலியாணப் படிப்பில் ஒரு கலியாணத்தில் நடைபெறுகின்ற கிரியை முறைகள் வரிசைக் கிரமமாகக் கூறப்படுகின்றது).

“நாட நல்ல கோவலனார் நன்மணிமண்டபம் புகுந்தார்” என்ற பாடல் வரியுடன் படிப்பு இடை நிறுத்தப்பட்டு ஆலயத்தில் விசேட பூசை நடைபெறும். இந்த விசேட பூசையின் பின்னர் கலியாணப் படிப்பு நைவேத்தியக் கதை படிக்கப்படும். இதனைப் பூசகரும் புத்தக நியமக் காரரும் படிப்பார். இப்பாடல்களில் கண்ணகை தனது திரு அவதார இரகசியம் கூறியதாகக் கூறப்பட்டுள்ளன. அவ்விபரம் பின்வருமாறு.

புகுந்து மஞ்சச் சயனமதிற் பொற்கொடியும் கோவலரும்
மகிழ்ந்திருந்த சமயமதில் மதன் கலக மயக்கமதால்
புகுந்தறிவிலன்னை தன்னைப் புகழ் பெருகு கோவலனார்
தகுந்தபடி கலவிதனிற் றழுவுதற்கு தொடங்கினரே

தொடங்கு வணிகேசருக்கும் தூய வண்ணகண்ணகைக்கும்
நடுவிடமோரனலெழுந்து நாடு சுடராய் பரந்து
தடம்பொருந்த முகடளவுஞ் சார்வளர்ந் தெழுந்தொழிய
இடம் பொருந்து கோவலரு மேக்கமுற்று நின்றனரே.

நின்றவந்தக் கினிக்கொழுந்ததனை நிமிர்ந்துகண்ட கோவலரும்
அன்று மனத்த திசயித்துஊ ஆயிழையே நாயகியே
இன்றனலிற் கொழுந்தெழுந்திங் கெரிவதொரு புதுமையிது
உன்றனை நான் றழுவு முனம் உற்றதென்ன வோதுமென்றார்

ஓதுமென்ற மொழிகேட்டு உத்தமியுமேதுரைப்பாள்
வாது மதன் தன்னைவென்ற வாகுபெற்ற நாயகனே
ஈதுரைப்பேனிரகசிய மெவர்களுக்கு முரையாதே
தாதளவு தார்மார்பா சாற்றுகிறேனெனவுரைப்பார்

உரைபொருவு மாங்கலிய முனைமணரத் தரித்ததனால்
புரையறு நாயகனெனவே பூவுலகிற் பேரானேன்
தரைமருவ வுனதுமொழி தவறாமனிறை புரிவேன்
வரைமருவு புயமுடைய மகிழ்நரே நீர் கேட்டிடுவீர்

கேட்டிடுவீர் தீண்டாத கிருபை புரை கற்புடையேன்
நா ட்டு சிவனருளாலோர் நாடு வினையுடையவள்நான்
பூட்டு முன்றன் மயல்தீர பூவுலகிற் கணிகையர்கள்
கூட்டமுண்டு பொருள் கொடுத்தோர் கொடியிடையைப்
புணர்ந்திடுவீர்

புணருமென்ற நாயகனே பூவுலகிலீதொருவர்
உணரார்க ளுகுரைத்தேனே லுறு பழுது மிகவுழது
துணர் மருவு மஞ்சமதிற் சூழுமனல் நாழுமிது
குணமருவ வெனைக்கூடக் குறிக்கில் வெந்து நீறாவீர்

ஆவிரென்ற மொழிகேட்டுஊ அகமகிழ் வினதிசயித்து
காவிநிகர் கண்ணனையீர் கற்புடைய தெய்வமுநீர்
தாவுமுன்றனருட் படியே தப்பிதஞ் செய்யே னெனவே
பாவின் மொழிப் பெண்ணுடனே பள்ளிகொண்டார் கோவலரே

பள்ளிகொண்டங் கெழுந்திருந்து பலபல வந்தனமுடித்து
ஒள்ளியதேன் மொழியாரு முத்தமரும் வீற்றிருந்தார்
கள்ளவிழுங் குழன்மடவார் கண்ணகைதன் மணமாலை
உள்ளபடி யுரைத்திடுகில் லுத்தமத்திலுத்தமமே

இவ்வகையான நைவேத்தியப் பாடல்கள் படித்து முடிந்ததும் கற்பூர ஆராதனையும் அதனைத் தொடர்ந்து சண்டேஸ்வர பூசையும் நடைபெற்றவுடன் அடியார்களுக்குப் பிரசாதம் வழங்கி அன்றைய கலியாணப் படிப்பு நிறைவு பெறும். அடுத்த ஆறாம் நாள் மாதவி ஆடல் அரங்கேற்று கதை படித்தல் விழா (மாதவி கூத்து) பகல் காலம் நடைபெறும். இந்நாளில் வழமையான விரதமிருந்து ஆலயத்துக்கு வரும் அடியார்கள் மாத்திரமன்றி ஊரிலுள்ள ஆண்கள் பெண்கள் என அனைவரும் கோவலர் கதை படிப்பதற்கும் அதனைக் கேட்பதற்குமாக ஆலயத்துக்கு வருகை தருவார்கள். பெண்கள் தங்கள் தங்கள் வசதிக்கேற்ப விலையுயர்ந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து தங்களை நன்கு அலங்கரித்து அன்றைய தினம் ஆலயத்துக்கு வருவது சிறப்பாகவும் கண்ணைக் கவரும் காட்சி நிறைந்ததாகவும் இருக்கும். இத்தினத்திலும் காலையில் கலியாணப் படிப்பு நாள் போல விசேட அபிஷேகத்துடனான பூசை நடைபெற்று மாதவி ஆடல் அரங்கேற்று கதை படிப்பதை பூசகரும் புத்தக நியமகாரரும் ஆரம்பித்து வைக்க, தொடர்ந்து ஏனையோர் மாறிமாறிப் படிப்பர். ஆலயத்துக்கு வருகை தந்தோர் அதனை ரசனையோடு கேட்டுக் கொண்டிருப்பர். மாதவி அரங்கேற்று கதையிலுள்ள பாடல்களில் சில வரிகள் அவற்றின் சிறப்பை இதனை வாசிப்போர் அறியும் பொருட்டு தரப்படுகின்றன. கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி ஆடற் கலையைக் குருவிடம் கற்று ஆடற் கலையில் வல்லவளாகி சோழ அரசன் சபையில் நாட்டிய அரங்கேற்றத்துக்கு வந்து சோழ அரசனை வாழத்தி வணங்கியதாக அமைந்த அகவல் பா.

வாழ்த்திடு மாநில மன்னர்கள் மன்னர் வீழ்மது தாமரை விதுமுது வதனா
மன்னியவுலகிலோர் மத்தமால்யானை போல் எந்நாளு மாழுராசகெம்பீரா
சூரியவங்கிஷ சொற்பரிசாதகர் போர் புனைநிதியம் பொரித்திடு புகழாய்
அடையலராய் வருமரசர் கூடங்கள் படையது முடிவுறப் பாய்புலிக் கொடியாய்

எறிவது தரளமாயி னத்திரை கொளிக்கும் பறைதரு பொன்னிசேர் பண்பு
காா்நாடர்
அன்றழிந்தலறும் பசுவின் கன்றுக்கு முலையைக் கருணை செய்தீரா
உத்தமதுங்கா வுலகினின் முதல்வா முத்தமிழ் கடல்களை முழுதளந்ததவனே
வெட்டிய சடந்தனிவிழு தளும் பழுந்தக் கிட்டியேபடைகளைக் கேடு
செய்பவனே

ஏழைகளுஞ்கணீ ரேதனவினவிச் சூழ்துயர் துடைத்துச் சுகமளிப்பவனே
எத்தகையோரு விளைத்திடக் காத்து வித்தக குடைநிழல் விடுத்துலகாண்டாய்
சுத்தனே யெளியவள் சொல்லிய கீதமு மத்தனே யென நான் மதித்திடு நடனமும்
குற்றமதுள தெனிற் கோடிநின் மனதில் வைத்திடாதருள் வாழிய வாழியதே

அரசனை வாழ்த்தி வணங்கிய பின்னர் சபையில் நடனமாடிய மாதவிக்கு அரசன் பரிசு வழங்கி மேலும் விரும்பியதைக் கேட்கும்படி கேட்டபோது மாதவி கேட்டுக் கொண்டபடி கம்பத்தின் மீது நின்று நடனமாடி கோவலர் கழுகத்தில் மாலை எறிந்து கோவலரைக் கணவனாக அடைந்த பாடல் வரிகள் சில

உரைக்கரிய வேந்தேகே ளுற்றவிந்தச் சபையோர்கள்
இருக்குமிடஞ் சொல்லுகின்றேன் யானுமொரு கன்னிமின்னாள்
வருத்தமுறக் கொடுபிறந்தேன் மாலையொன்றென் மார்பகத்திற்
இருப்பதிதை இச்சபையி லேற்றுஞ் செப்புக் கம்பமதில்

கம்பமதிலேறி நின்று கழுத்தில் மாலை தனைக் கழற்றி
உம்பருல கோங்கிவர வொருநொடியி லெறிந்திடுவேன்
இம்பரிந்தச் சபையினிடத் தெவர் கழுத்தில் விழுந்தாலும்
நம்புமென்ற நாயகனாய் நாடவேண்டுமவ ரெனக்கே.

வேண்டுமெனக் கிவ்வரத்தை வேண்டுகின்றேனென்று குற்றந்
தீண்டவல்ல செந்திருப்போற் சேயிளையாளுரைப்பளவில்
காண்டகைய சோழதுரை காரிகைக்கங் கீதுரைப்பான்
ஈண்டியுன்றன்மாலை சபை யெவர்கழுத்தில் விழுந்தாலும்

தாலமது மரம்வீடு தடிமலையில் விழுந்தாலுங்
கோல விழிமாதவியே கொழுநணோ நீர்சொல்லுமென்ன

ஆலகண்டர் தம்மாணை யாரிடத்தில் விழுந்தாலும்
மேலும் ஒன்றும்பேசாமல் விரைவில் மணம்முடிப்பே னென்றாள்

என்று சொல்லச் சம்மதித்து ராசராசன் சபையிருக்க
கன்றுமானை நிகர்த்தவிழி காரிகையாள் கம்பமதில்
நன்றுடன்மேல் ஏறிநின்று நடனராகம் பலதாடி
வென்றிகொண்டங் குடன்பிறந்த மிகுமாலை கழற்றினளே

மாலைகழற்றிடு மளவில் மாதேவியின் றாயவளும்
பால் நிறத்தின் வீணையொன்றைப் பரிவுடனே வாயில்வைத்து
கோலமுத்து மாலைதன்னைக் கோவலனார் தன்கழுத்தில்
மேல் விழ நீயெறியெனவே வீணையினாலூதினளே

ஊதுமந்த வீணையொலி யுற்றசெவி மாதேவியும்
ஆதிமுதற் பரனாரே யாலவாயிலமர்ந்தவரே
வாதுவெல்லுங்கோவலனார் மலர்கழுத்தில் விழுவதன்றி
ஈதொருவ ரிடமணுகா தித்தருணங் காருமென்று

கார்குழலி மாலைதன்னை கவன்விரைவினுடனெறிய
கார்வளைந்த வேடமெனக் கறகறெனச் சுழன்றுதிசை
காராளர் கொடியெனவே கண்டசபையோர் மயங்கக்
காரையூரன் சுதகோவலன் கழுத்தில் வந்து விழுந்ததுவே

விழுந்த மணிமாலை தன்னை மிகச்சினத்து கோவலனார்
உழுந்துருளு முனங்களற்றி யுயர வழியெறிந்திடவுஞ்
செழுந்தரளமாலையது சென்றுவழியாய்ச் சுழன்று
குளிர்ந்தமுக மாதவி தன் குழுங்கழுத்தில் விழுந்ததுவே

இத்தன்மையான மாதவி ஆடல் அரங்கேற்று கதை படித்து நிறைவடைந்ததும் ஆலயத்தில் விசேட பூசை நடைபெறும். விசேட பூசை நிறைவடைந்ததைத் தொடர்ந்து அடியார்களுக்கு விபூதி, தீர்த்தம் முதலான பிரசாதங்கள் வழங்கப்படும். இத்துடன் ஆறாவது நாளான மாதவி கூத்து என அழைக்கப்படும் மாதவி ஆடல் அரங்கேற்று கதைப்படிப்பு விழா நிறைவுறும். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை ஏழாவது நாள் சிலம்பு கூறல் கதை படித்தலும் பண்டமெடுத்தல் நிகழ்வும் நடைபெறும் விழாவாகும்.

ஏழாம் நாளன்று காலை வழமைபோல காலைப் பூசை நடைபெறும். மாலை விசேட அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து விசேட பூசை ஆரம்பிப்பதற்கு முன்னர் முத்தரிசி எடுத்தல் நிகழ்வு நடைபெறும். அபிஷேகம் நிறைவடைந்ததும் பூசகர் தன்னிலை மறந்து பரவச நிலையடைந்தவராக ஆலயத்தின் நான்காம் மண்டபத்திற்கு வருவார். இச்சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கும் உதவியாளர்கள் முத்தரிசியெடுப்பதற்குரிய பச்சை அரிசி, மஞ்சள் மா, குங்குமம், சுண்ணாம்பு போன்ற பொருட்களை ஒவ்வொன்றாகக் கொடுக்க பூசகர் இப்பொருட்களை நீர் தெளித்துச் சுத்தம் செய்து முதலில் பச்சை அரிசியை தனது இரு கைகளையும் சேர்த்து மூன்று முறையள்ளி இதற்கென ஆயத்தம் செய்து வைக்கப்பட்டிருக்கும் பனை ஓலையினால் இழைக்கப்பட்ட கூட்ட மூடலின் தாய் மூடலினுள் இடுவார். இதன் பின்னர் இவற்றுள் மஞ்சள் மா, குங்குமம், சுண்ணாம்பு ஆகியவற்றைச் சேர்த்து நீர் தெளித்து நன்றாகக் கலந்த பின் மூலஸ்தானத்தில் இருக்கின்ற சிலம்பு, அம்மானை ஆகியவற்றில் ஒவ்வொன்றை எடுத்துவந்து கூட்ட மூடலின் மோல் மூடலினுள் அவைகளை வைத்து அத்துடன் வேப்பம் பத்திரத்தையும் அம் மூடலினுள் சேர்த்து முத்தரிசியுள்ள தாய் மூடலின் மேல் நிமிர்ந்த நிலையில் மேல் மூடலையும் வைத்து இம் மூடல்களை ஆலயத்தினுள் கொண்டு சென்று அலங்காரஞ் செய்யப்பட்டுள்ள அம்மன் எழுந்தருளியிருக்கின்ற பீடத்தின் மீது வைத்தவுடன், அம்மனுக்குரிய வளந்துப் பானை சுத்தம் செய்யப்பட்ட நிலையில் பூசகரின் கையில் கொடுக்கப்படும் அதனையும் பெற்று அம்மன் முன்னிலையில் வைப்பார். இதன் பின் உதவியாளர் கொடுக்கும் நீரினால் கையலம்பியதும் பூசகர் விசேட பூசைக்குத் தயாராவார். இங்கு நடைபெறுகின்ற கைங்கரியங்கள் ஒவ்வொன்றும் உதவியாளர்களின் செயல்களிலேயே தங்கியிருக்கின்றது. பரவச நிலையில் நிற்கின்ற பூசகரிடம் உரிய உரிய பொருட்களை அதன் வரிசைக் கிரம முறைப்படி கொடுக்கத் தவறினால் பூசகரினால் அடுத்த கைங்கரியத்தினை நடாத்த இயலாது தடுமாறுகின்ற நிலை ஏற்படும். விசேட பூசை ஆரம்பமாகி அது நிறைவடைந்ததும் காப்புச் சொல்லப்பட்டு வழமைபோல பூசகரும் புத்தக நியமகாரரும் சிலம்பு கூறல் கதை படிப்பை ஆரம்பித்த பின்னர் ஏனையோர் இருவரிருவராக சிலம்பு கூறல் கதை படிப்பர். இப்படியாக படிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பூசகர் அமைதியாக ஓர் பக்கமாக அமர்ந்திருப்பார். இதனைப் பண்டமெடுப்பதற்குச் செல்வதற்கான நிலையென உணர்ந்து கொண்ட உதவியாளர் பண்டமெடுப்பதற்குக் கொண்டு செல்கின்ற பொருட்களை ஆயத்தம் செய்து வைப்பார். பண்டமெடுத்தல் என்பது பொங்கல் தினத்தில் மடைக்கு வைக்கப்படும் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், தேசிக்காய் மற்றும் பூசைக்குரிய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு பூர்வீக

நாகதம்பிரான் ஆலய முன்றலில் ஓர் இடத்தில் சேர்த்து வைக்கப்படும். இப்பொருட்களே பண்டமென்றும் இப்பொருட்களை ஆலயத்திற்குச் கொண்டு வரும் நிகழ்வே பண்டமெடுத்தலும் ஆகும். ஓர் பக்கமாக அமர்ந்திருந்த பூசகர் பரவசநிலை அடைந்தவராக எழுந்து ஆலயத்தினுள் செல்ல உதவியாளர் அவரைத் தொடர்ந்து சென்று கற்பூர தீபத்தினைக் கொழுத்திப் பூசகர் கையில் கொடுக்க அதனை மும்முறை காட்டிய பின்னர் அம்மனுக்குரிய வளந்தை புத்தக நியமகாரரிடமும் முத்தரிசி மூடல்களை அதற்கென நியமிக்கப்பட்டவரிடமும் கொடுக்கப்படும். இதன் பின்னர் பண்டமெடுக்கச் செல்கின்ற தெய்வங்களைக் குறிக்கும் சிலம்பு, அம்மானை சூலம், பொல்லு ஆகியவற்றுடன் வேப்பம் பத்திரத்தினையும் எடுத்துக்கொண்டு ஆலய வெளிவாசல்வரை பின்நோக்கி நடந்துவந்து நாகதம்பிரான் ஆலயத்தை நோக்கி ஆனந்த நடனமாடிக் கொண்டு பூசகர் செல்ல அந்நடனத்திற்கு இசைவாக பறையோசை முழங்க ஆண் அடியார்களும் பின் தொடர்ந்து செல்வர்.

பூசகர் நாகதம்பிரான் ஆலய வாசலைச் சென்றடைந்த அதேநேரம் நாகதம்பிரான் ஆலயக் கதவு திறக்கப்பட்டு பூசை நடைபெறும். அந் நேரத்தில் பூசகர் பரவசநிலை தெளிவடைந்து நாகதம்பிரானை வணங்கிய பின்னர் நாகதம்பிரான் ஆலய முன்றலில் ஓர் இடத்தில் நீர் தெளித்துப் பூமி சுத்தம் செய்து சூலத்தினை நாட்டி அதன் முன்னிலையில் வெள்ளை விரித்து அதற்கும் நீர் தெளித்துச் சுத்தம் செய்து அதன் மீது சிலம்பு, அம்மானை, பொல்லு ஆகிய தெய்வச் சின்னங்களைத் தாபனம் செய்து சூலம் முதலான தெய்வ சின்னங்களுக்கு நீர் அபிஷேகம் செய்து விபூதி, சந்தனம், குங்குமம் அணிவித்து கற்பூர ஆராதனை செய்த பின்னர் நீர் தெளித்து வெள்ளை விரித்து அதன்மீது நீர் தெளித்து வளந்து, முத்தரிசி மூடல் ஆகியவற்றைப் பூசகர் பெற்று வெள்ளை மீது வைப்பார். இதனைத் தொடர்ந்து ஏனைய பண்டப் பொருட்கள் அந்த வெள்ளை மீது வரிசையாக வைக்கப்படும். எல்லாப் பொருட்களும் வைக்கப்பட்ட பின்னர் வெற்றிலை, பாக்கு முதலாகச் சொல்லப்பட்ட எல்லா வகைப் பழங்களிலும் சிலவற்றை எடுத்து காம்பு நீக்கி கழுவிச் சுத்தம் செய்து காளாஞ்சி வைத்து பூசை நடைபெறும். (காளாஞ்சி என்பது வெற்றிலை, பாக்கு, பழவகை சேர்த்து இறைவனுக்கு நிவேதனம் செய்யும் பொருட்களைக் குறிக்கும்) பூசை நிறைவடைந்ததும் வளந்து முத்தரிசி மூடல், ஒரு வாழைக்குலை, ஒரு பலாப்பழம் ஆகியன பூசகரினால் உரியவர்களிடம் கொடுக்கப்பட ஏனையவர்கள் மற்றைய பொருட்களை எடுக்க பூசகர் தெய்வச்சின்னங்களை எடுத்துக்கொண்டு அம்மன் ஆலயத்தைச் சென்றடைவர்.

பூசகர் தெய்வச் சின்னங்களை உரிய இடங்களில் திரும்ப வைத்துவிட்டு ஆலயத்தின் நான்காம் மண்டபத்தில் நீர்

தெளித்து வெள்ளை விரித்து நீர் தெளித்து பண்டப் பொருட்களை வைப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டு வளந்து, முத்தரிசி மூடல் ஆகியவற்றைப் பெற்று அவைகளை ஆலய மூன்றாம் மண்டபத்தில் வைப்பார். பண்டப் பொருட்களும் ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டு அதன்மேல் வெள்ளைச் சீலை விரித்து மூடப்படும். இதனைத் தொடர்ந்து கற்பூர ஆராதனை நடைபெற்று பண்டமெடுத்த அடியார்களுக்கு விபூதிப் பிரசாதம் வழங்கப்படும். இத்துடன் பண்டமெடுத்தல் நிகழ்வு நிறைவடைய தொடர்ந்து இரவு முழுவதும் சிலம்பு கூறல் கதை படிக்கப்படும்.

கோவலர் கதையில் வரும் சிலம்பு கூறல் கதை என்பது மாதவிக்குத் தனது செல்வம் அனைத்தையும் கொடுத்து வறுமை அடைந்த கோவலர் தனது மனைவியாகிய கண்ணகியின் ஒரு கால் சிலம்பினை விற்பதற்குப் பாண்டி நாட்டிற்குச் செல்வதுவும் அங்கே பாண்டிய மன்னனினால் அவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை பற்றியும் கூறுவது, பாண்டி நாட்டிற்குச் செல்லும் வழியில் மலைக் குறத்தி ஒருவரிடம் கோவலர் சாஸ்திரம் கேட்ட போது மலை வாழ் குறத்தி சாஸ்திரம் கூறியதாக அமைந்த பாடல் குறச்சிந்து பின்வருமாறு:

வந்தாய் காணீ மகனே மரபுகிளையுடனே
மதியும் விதிகுறையாலே பதியதனைவிட்டு
உந்தன் நிதிதோற்ற பின்னுன் சுந்தரி நீயும்
உயர்மதுரைக் கேகவென்று தெருவதனில் வந்து
சிந்தைமகிழ்ந்திடச்சியம்மை தெருவிலருந்துணையாய்த்
தேடவவள்கூடமனைசென்று குடியிருந்து
உந்தன் மின்னாள்கழலிணையிலோர்சிலம்பைக்கழற்றி
உயர்வணிகேசே துணிவாயிங்குவிற்க வந்தாய்

வந்தவிந்தச் சிலம்புதன்னால் வரும் வினையுமதிகம்
மணிச்சிலம்புநாகமணித்துணைச் சிலம்பொன்றாமே
வந்தவிந்தப் பரிபுரத்தால் மாறனகரழியும்
வணிகேசேயுனதுயிரு மாளும் வழியிதுவாம்
வந்தவுந்தன் பெண்ணினுக்கு மரந்துறவு சரியோ
மாதுமனக்கோபமுற்று வழிவிடுவாள் கிளியே
வந்து மதுராபுரியிற் செந்தணலைக் கிளப்பு
மாறனுடனூர்முழுதும் அழிப்பள்கிளிமொழியே

மொழியமிர்தமுற்ற கிளிமொய்குழல் மீனாட்சி
முன்னவனாரிடமருவுமுன்னுதிருக்காட்சி
ஒளிமருவு ஞானவித்தாமுமை கயிலைக்காட்சி
உத்தமியோர் பத்தினியெம் வித்தகிகாமாட்சி
பழைய பரம்பரையிங்ஙனம் வந்ததொரு ஆட்சி
பாருலகின் மதுரையரசாட்சிபடச்சாட்சி
சுழல்விழியாளுனக்கருகே கூடினதோர் தாழ்ச்சி
குமரனே நீயவளுக்கொரு கணவனல்லச்சீச்சி

சீரேறு சகலகலை ஞானமுதல் நிறைந்தாள்
திருவுருவாயொருசமபதந் தீர்க்கப் புவி பிறந்தாள்
சீரேறு சிலம்புவிற்குஞ் செய்கையினியறிகாண்
திருச்சிலம்பாலுயிர்கொலை யென்றிருக்கு திந்தக்குறிகாண்
சீரேறுமுலகுபுகழ்சேர்வணிகனாரே
திரும்பிமனை செல்லுமிது நயந்தருவதில்லை
சீரேறுநெல்லின் குறிதிட்டமிதுபட்டதுவே
செல்லவேண்டாமல்லல் வருஞ் சென்றிடுவீரென்றாள்.

விடியற்காலை சூரியோதயத்திற்கு முன்னர் வளந்து கட்டல் பூசை நடைபெறும். பூசை நிறைவடைந்ததும் நீரினால் சுத்தம் செய்யப்பட்ட வளந்துப் பானைகள் ஆலய ஐந்தாம் மண்டப வாயிலில் விரிக்கப்பட்ட வெள்ளையில் ஆலயத்தின் வலமிருந்து இடமாக பிள்ளையார், வைரவர், அம்மன். காத்தவராயர், நாகதம்பிரான் ஆகிய தெய்வங்களுக்குரிய ஒழுங்கில் நிரையாக வைக்கப்படும். இப்பானைகளை நீர் தெளித்து சுத்தம் செய்த பின் இவைகளுக்கு விபூதி, சந்தனம், குங்குமம் முறைப்படி அணிவித்ததுடன் இவைகளின் கழுத்துப் பாகத்தில் மும்மூன்று வெற்றிலை கட்டப்படும். இதன் பின்னர் இவ்வளந்துகளுக்கு தூபதீப ஆராதனை நடைபெறும். இந்நேரத்தில் பூசகர் பரவசநிலை அடைவது வழக்கம். பரவசநிலையடைந்த பூசகர் முதலில் பிள்ளையாருக்குரிய வளந்தை எடுத்து எட்டுத் திக்கையும் பார்த்து மூன்று முறை நேர்ந்து பின் வளந்துக்குரிய உபயகாரரிடம் வளந்தைக் கொடுத்தபின் நாகதம்பிரான் வளந்தை எடுத்து இதுபோல நேர்ந்து அதனையும் உபயகாரரிடம் கொடுப்பார். அடுத்து அம்மன் வளந்து நேரப்படும். இவ்வளந்து நேரப்படும் ஒவ்வொரு தரமும் வளந்து நேரப்பட்ட பின்னர் சிலம்பு கூறலிலன்று தயாரித்து

வைக்கப்பட்டிருந்த முத்தரிசி எறிந்து நீரும் தெளிக்கப்படும். இப்படியாக மூன்று முறை வளந்து நேரப்பட்டு முத்தரிசி எறிந்து நீரும் தெளிக்கப்படும். இவ்வளந்து புத்தக நியமகாரரிடம் கொடுக்கப்படும். இதே ஒழுங்கு முறையில் வைரவர், காத்தவராயர் வளந்துகளும் நேரப்பட்டு முத்தரிசியும் எறியப்பட்டு உரிய உபயகாரரிடம் கொடுக்கப்படும். இதனைத் தொடர்ந்து ஐந்து வளந்துகளும் ஒரு முறை ஆலயத்தினைச் சுற்றிக் கொண்டு வந்து நெருப்பேற்றப்பட்ட அடுப்புக்களில் உரிய ஒழுங்கில் வைக்கப்பட்ட பின் வளந்துகளுக்கு நீர் நிறைக்கப்பட்டு எல்லா வளந்துகளுக்கும் தேங்காய்ப்பால் விடப்படும். பால் பொங்கிச் சரியும் வரை நன்றாக நெருப்பு எரிக்கப்படும். பால் பொங்கிச் சரிந்தபின் பூசகரினால் வளந்துகளுக்கு அரிசி போடப்படும். இப்படியாக எல்லா வளந்துகளும் பொங்கல் செய்தல் நிறைவடைந்ததும் வெள்ளைத்துணிகளினால் வளந்தின் வாயை மூடிக்கட்டியபின் தூபதீப ஆராதனை செய்யப்பட்ட வளந்துகள் இறக்கப்பட்டு ஆலயத்தினுள் வைக்கப்படும். இவ்வளந்துப் பொங்கலில் சர்க்கரை சேர்க்கப்படாமை குறிப்பிடக் கூடிய விடயமாகும்.

சூரிய உதயத்தின் முன் ஆரம்பிக்கப்படும் வளந்து கட்டும் நிகழ்வு திங்கட்கிழமை காலைப்பொழுதில் வளந்துப் பொங்கல் நிகழ்வுடன் நிறைவடையும். திங்கட்கிழமை பெருந்தொகையான அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தருவர். இவர்களில் அனேகமானோர் தங்கள் தங்கள் வசதிக்கேற்ப பொங்கல் செய்வார்கள். இன்றைய நாள் கோலாகலமாக பெருந்தொகையான மக்கள் கூடும் பொங்கல் நாளாகும்.

இன்றை பொங்கல் நாளிலே அம்பாள் அடியார்கள் பல வகையான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக ஆலயத்திற்கு வருகை தருவார்கள். பொக்குளிப்பான், சின்னமுத்து, கூகைக்கட்டு, கண்ணுறுட்டுப் போன்ற தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் இந்நோய்த் தாக்கத்திலிருந்து நோயுற்றவரைப் பாதுகாப்பதற்கும் குடும்பத்தில் மற்றையவர்களுக்கு இந்நோய் பரவாமலிருப்பதற்கும் அம்மனுக்கு நேர்த்தி வைப்பார்கள். இந்நோய்கள் அம்மனின் கோபத்தினாலேயே வருவதெனவும் நம்புவதுடன் இந்நோய்களை அம்மன் நோய்கள் எனவும் அழைக்கின்றார்கள். பல வகையான காவடிகள், கரகங்கள், பாற்செம்புகள். கற்பூரச் சட்டிகள்ஆகியவற்றினைத் தாங்கிய பல அடியார்கள் அடியார் கூட்டத்தினருடன் சேர்ந்து கூட்டம் கூட்டமாக நாகதம்பிரான் ஆலயத்தை வந்தடைந்து நாகேஸ்வரப் பெருமானையும் மருதடி வைரவப் பெருமானையும் வழிபட்டு அவர்களின் முன்னிலையில் ஆனந்தப் பரவசமாக ஆடி அத்தெய்வங்களின் அருளினைப் பெற்றுக்கொண்டு அம்பாள் ஆலயத்தினை வந்தடைவர். அங்கு பறை மேளம் முழங்க உடுக்கு நாதம்

இசைக்க அரோகரா என்னும் ஓசை எழுப்பி காவடி, கரகம் என்பன எடுத்துவருபவர்களும் பறையோசை. உடுக்கை என்பனவற்றிற்கு அமைவாக நடனமாடுபவர்களைப் போல அழகாக ஆலய வாசலில் நின்று ஆடும் காட்சி பார்ப்பவர்களுக்கு பக்தி ஆனந்தத்தைக் கொடுக்கும் காட்சியாக அமையும். இப்படியாக காவடி, கரகம். பாற்செம்பு எடுப்பவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கும் நேரத்தில் கோவலர் கதையில் சிலம்பு கூறல் கதையைத் தொடர்ந்துள்ள உயிர்மீட்சி, வழக்குரை, மதுரைத்தகனம் ஆகிய கதைகள் குளிர்ச்சி கதைவரை படிக்கப்படும். காவடி, கரகம். பாற்செம்பு என்பன வந்தடைந்த பின் அவைகளில் கொண்டு வரப்பட்ட பால் ஒன்றுசேர்க்கப்பட்டு அபிஷேகத்திற்கு எடுக்கப்படும். இதனைத் தொடர்ந்து மூர்த்திகளுக்கு அபிஷேகம் ஆரம்பமாகும். பத்ததியில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி உதவியாளர்களின் உதவியுடன் பூசகரினால் விநாயகப் பெருமான், அம்மன், நாகதம்பிரான், வைரவர், காத்தவராயர் ஆகிய மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்யப்படும். அபிஷேகம் நிறைவடைந்ததும் மூர்த்திகளுக்கு விபூதி, சந்தனம். குங்குமம் அணிவித்து வஸ்திரம் சாத்தி அம்மனுக்குப் பல வகையான நகைகளை அணிவித்து, மூர்த்திகளை அலங்காரம் செய்வர்.

இதன் பின்னர் மடை பரவல் அல்லது மடை பாவித்தல் என்ற நிகழ்வு நடைபெறும். மடை பாவித்தல் என்பது முதல்நாள் கொண்டு வந்து வைத்த பண்டங்களென அழைக்கப்படும். பழவகைகளை உரிய முறையில் காம்பு அறுத்து கழுவி சுத்தம் செய்த பின் மூர்த்திகளுக்கு நிவேதனம் செய்யும்பொருட்டு பார்ப்பதற்கு அழகாக முறைப்படி வரிசைக்கிரமமாக அடுக்குதலாகும். இக்கடமையில் அனுபவமுடையவர்களே இதனைச் செய்ய முடியும். மூல மூர்த்தியாகிய அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்குமான முன்னிலை மடையினைப் பூசகர் வைப்பார். அடுத்துப் பொதுவான மடை மூன்றாம் மண்டபத்தில் வைக்கப்படும். இதனை உதவியாளர் மேற்கொள்வர். இதற்கு ஒழுங்குமுறையுண்டு. அதாவது வெள்ளைச்சேலை மூன்று ஒன்றுடன் ஒன்று இணைந்தவாறு கிழக்கு மேற்காக விரிக்கப்படும். இதன் மீது நீர் தெளித்துச் சுத்தம் செய்த பின் ஐந்து நிரையாக வெற்றிலை பாக்கு வைக்கப்பட்டு அதன் மேல் சீப்பாக அறுத்தெடுக்கப்பட்ட வாழைப்பழம் அடுக்கப்படும் அவைகளுடன் மாம்பழங்களும், தேசிக்காய்களும் வைக்கப்படும். மேலும் நீள் துண்டுகளாக வெட்டப்பட்ட பலாப்பழங்கள் வாழைப்பழத்தினிடையே நிரையாக அழகாக வைக்கப்படும். வைக்கப்பட்ட மடையின் நான்கு மூலைகளிலும் முகமும் அடியும் வெட்டப்பட்ட இளநீர் (இதனை வெட்டிளநீர் என அழைப்பர்) வைக்கப்படும்.

மடை பாவித்தல் நிறைவடைந்ததும் பொங்கி வைக்கப்பட்ட வளந்துகள் அந்தந்த மூர்த்தியின் முன்னிலையில் படைக்கப்படும். மேலும் அடியார்களின் பொங்கல்கள் மூன்றாம் மண்டப மடையின் முன் படைக்கப்படும்.

இந் நேரத்தில் உடுக்கு வாசித்து திறமையாக இசைபாடும் ஆற்றலுடைய நாகர்கோவில் வடக்கைச் சேர்ந்த அம்மனின் அடியார்கள் காத்தவராயர் சரித்திரநாடகப்பாடல்களைப்பாடிக்கொண்டிருப்பார்கள். இப்பாடல்கள் கேட்பதற்கு இனிமையானவையாகவும் பக்தி நிரம்பியவையாகவும் இருக்கும். மேலும் விநாயகர், அம்மன், நாகதம்பிரான், வைரவர், காத்தவராயர் ஆகிய தெய்வங்களின் மீது அவர்களாலேயே இயற்றப்பட்ட கிராமிய மணங்கமழும் பக்திப் பாடல்களையும் பாடுவர். கதவுதிறந்து பூசை ஆரம்பிக்கும் முன்னர் வைக்கப்பட்ட நிவேதனப் பொருட்களெல்லாம் பத்ததியில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி அதற்கான மந்திரங்களுடன் மூர்த்திகளுக்கு பூசகரினால் நிவேதனம் செய்யப்படும்.

உடுக்கின் ஓசை, பாடல் ஓசை, பறைமேள ஓசையின் மத்தியில் பூசை ஆரம்பமாகும். பூசை தொடங்க முன்பாக மணி இசைக்கப்படும். மூன்றாம் மண்டப எழுந்தருளிக்கு முன்பாக ஆரம்பப் பூசை நடைபெறும். முதலில் ஐந்து அடுக்குத் தீபம் கொழுத்தி பூசகரின் கையில் உதவியாளர் கொடுக்க கதவு திறக்கப்படும். பூசகர் பரவச நிலையுடன் தீபத்தினை முறைப்படி காட்டி ஆராதனை செய்வார். உதவியாளர் ஒவ்வொரு தீபமாக பத்ததியில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி தீபத்தினைக் கொடுக்க பூசகர் தீப ஆராதனையை மேற்கொள்வார். இப்பூசைநடைபெறும்போது உதவியாளர் தவறாக ஏதாவது பூசைப்பொருட்களினைக் கொடுக்கமுற்பட்டால் பூசை தடைப்படும். பூசகர் எதுவும் செய்யமுடியாத நிலையில் நிற்பார். சரியாக பொருள் கொடுக்கப்பட்ட பின்னரே பூசை தொடரும். இது ஒரு அற்புதமான நிகழ்வாகும். மூன்றாம் மண்டபத்தில் தீப ஆராதனை நிறைவடைந்ததும் இரண்டாம் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கின்ற விநாயகப் பெருமானுக்கு பஞ்சாலாத்தி தீப ஆராதனை நடைபெறும். அதனைத் தொடர்ந்து மூல மூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்ற அம்பாளுக்கு மலர்களாலான அர்ச்சனையும் பஞ்சாலாத்தி தீப ஆராதனையும் நடைபெறும். இந்த நேரத்தில் ஆலய வாசலில் வெள்ளை விரித்து கண்மடல்கள் அதன்மீது வைக்கப்படும். அடியார்கள் தங்களால் இயன்ற காணிக்கையை அந்த வெள்ளையில் வைத்து விட்டு கண்மடல்களினை எடுத்து, தமது கண்களிலும், தமக்கு விரும்பிய ஏனைய உடல் உறுப்புகளிலும் பத்தியோடு ஒற்றிவிட்டு அதைத் திரும்பவும் வெள்ளையில் வைப்பர்.

கண்மடல் என்பது கண், கால், கை போன்ற உடல் உறுப்புக்களில் தீராத நோய் ஏற்பட்டவர்கள் அம்மன் மீது நேர்த்தி வைத்து அந்நோய் முற்றாகக் குணமடைந்த பின், கண் மடல், கை, கால் போன்ற உருவங்களை வெள்ளியினால் செய்வித்து காணிக்கையாகக் கொடுப்பர். இதுவே பொதுவாகக் கண்மடல் எனப்படும். கண்மடலினைப் பொதுவாக உடல்உறுப்புகளில் ஒற்றினால் அடுத்த வருடப் பொங்கல் வரை அந்த உறுப்புக்களில் எந்தக் குறையும் வராது அம்மாளாச்சி பாதுகாப்பார் என்பது அம்மன் அடியார்களின் நம்பிக்கையாகும். பஞ்சாலார்த்தி தீபாராதனை நிறைவடைந்ததும், நாகதம்பிரான், வைரவர், காத்தவராயர் ஆகிய மூர்த்திகளுக்குப் பூசை நடைபெறும். அதனைத் தொடர்ந்து எழுந்தருளிக்குப் பஞ்சாலார்த்தி தீபாராதனை நடைபெற்று புத்தக நியமகாரரினால் பஞ்சபுராணம் ஓதப்படும். பஞ்சபுராணம் ஓதல் நிறைவடைந்ததும் திரும்பவும் பஞ்சாலார்த்தி ஆராதனை நடைபெறும். இதனைத் தொடர்ந்து பூசகர்கரினாலும், புத்தக நியமகாரரினாலும் குளிர்ச்சிப் பாடல் படிக்கப்படும்.

கோவலருக்கு அநீதியாக மரணதண்டனை வழங்கிய பாண்டிய மன்னனின் மதுரை நகரை எரித்த கண்ணகியின் கோபத்தினைத் தணித்து மனங்குளிரும் படியாக மதுரை நகர் இடையர்குலப் பெண்கள் கண்ணகையை வேண்டியதாகவும் அவர்களின் வேண்டுதலை ஏற்ற கண்ணகி மனங்குளிர்ந்து மழைபொழிவிக்க; எரிந்த நெருப்பு நீரினால் அணைய; வேண்டிக்கொண்ட இடையர்குலத்திற்கு அருள் கொடுத்த கண்ணகி இலங்கை நகர் சென்றதுவும் இலங்கை நகரிலே வடபகுதியில் கடற்கரையோரமான பல தலங்களில் கோயில் கொண்டதாகவும் வற்றாப்பளையென்னும் இடத்தில் பசுவினங்களை மேய்க்கும் சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்து தெய்வமாகக் கோயில் கொண்டருளி அங்கிருந்து கதிர்காமம் சென்று திருக்கைலாயத்தை அடைந்து பரம்பொருளாகிய சிவனிடத்தில் இணைந்து கொண்டதும் பற்றிக்கூறுவது கோவலர் கதையில் கூறப்பட்டுள்ள குளிர்ச்சிப் பாடல்களாகும். அந்தக் குளிர்ச்சிப் பாடல்கள் பின்வருமாறு

வாரிவிடமுண்ட கண்ட மாதுபாக ரருண்மகவே
கூரியவோர்மருப் புடைய குஞ்சரமே நெஞ்சகமே
காரிகைகண்ணகைக் குளிர்ச்சி காதலுற வோதுதற்குச்
சீரினுமின்னருள் புரிவாய் தினமதனிற் பூசைசெய்வேன்.

பூசைசெய்தங் கிடைச்சியர்கள் பொற்கொடியை வீழ்ந்திறைஞ்சி
தேசொழியே பாண்டியன்செய் தீவினையி னானசினம்
நாசகியே குளிர்ந்தருள்வாய் நற்கொடியே குளிர்ந்தருள்வாய்
வாசமுறு மாநாகர் மாமகளே குளிர்ந்தருள்வாய்.

குளிர்ந்தருளுஞ் சிவனிடத்திற் கொடியிடையே குளிர்ந்தருள்வாய்
தனஞ்செறிந்த பாண்டியன்தன் தன்மகவே குளிர்ந்தருள்வாய்
வளஞ்செறிந்த கோவலற்கு மனையனையே குளிர்ந்தருள்வாய்
உளஞ்செறிந்த சுடரொளியே யுத்தமியே குளிர்ந்தருள்வாய்.

குளிர்ந்தருளாய் பாண்டியன்செய் குற்றமதாற் கூடலிதைக்
கொழுதழலுண் டிடவிடலோ கொழுந்தனையேகுளிர்ந்தருள்வாய்
களிந்தொழிசே ராயிரங்கட் காரிகையே குளிர்ந்தருள்வாய்
விழுந்தழலைக் குளிர்ந்தருள்வாய் வித்தகியே கோபந்தகீஇ.

## வேறு

கோபங்கொள்ளாதேயென் தாயேகுளிர்ந்தருள்
கோவல னல் தாவிடாதாகக் குளிர்ந்தருள்
கோபங்கொண்டாலண்ட மண்டலங்கூடுமோ
கோவினழல்மாறருள் குளிர்ந்தருளவேணும்
கோபங்கொணாக மணிதரித்தனையே
குலமலைக்கொடியழல் குளிர்ந்தருளவேணும்
கோபங்கொள்ளாதே யெங்கள்யோகமாதாவே
கூடலழல்மாறக் குளிர்ந்தருளுமருளே

குளிர்ந்தருளவேணுமென் றங்கிடைக்கொடியிடைக்
கோதையர்கள்கும்பிடக் கோதைகண்ணகையுங்
குளிர்ந்தகமகிழ்ந்துங்கள் குறைவு நிறைபுரிவேன்
கோதையீர்கொண்டதுயர் மாறுமென்றருளிக்
குளிர்ந்தன்னைவானத்தை யுடநோக்குமளவிற்
கோவினுறைவான்குல மேகங்கறுத்து
குளிர்ந்தருளினோடு மிகவுழுந்துருளமுன்னாய்க்
கோலமுறுதாரைநீர் பார்சொரிந்தனவே.

## வேறு

சொரியுமந்த மழைநீராற் றுய்யமது ராபுரியில்
எரிந்தகடு நெருப்பகற்றி யெவ்விடமுங் குளிரேற்றி
புரிந்தகுழ லிடைச்சியர்க்கும் போற்றுநல்ல வரங்கொடுத்து
கரிந்தகுழற் கண்ணகையார் காவிலங்கைக் கெழுந்தனளே.

காணவொரு காற்சிலம்புங் கையில்வேம்பின் பத்திரமுங்
காணமுன்னா ளிலங்கைநகர் காதலித்த தவத்தாலே
காணநல்ல இடைச்சியர்கள் கதிமறித்து மழுதுசெல்லக்
காணரிதாய் வாணுதலாள் கசிந்திடையர் தெருக்கடந்தே.

இடையர்தெரு தனைக்கடந்து மிசைந்தசொக்கர் கோயில்சென்று
இடபமிவர் பரனையுன்னி யேத்திநிற்குஞ் சமயமதில்
இடபாரூட னெழுந்தருளி யேந்திழையின் முகநோக்கி
இடமுடைய மலைமகளே யேதுவர முரையுமென்றார்.

உரையுமெனக் கயிலைசெல்ல வுத்தரவு தந்தருளும்
வரையுமொரு கரத்தில்வில்லாய் வாங்கினரே யெனமொழிய
கரியுமுரித் துடுத்தபிரான் கண்ணகையின் முகநோக்கி
பெரியதொரு வுலகீன்ற பெண்கொடிகே ளெனமொழிந்தான்.

பெண்கொடியே யிலங்கையென்னும் பெரியதொரு தேசமுற்று
நண்படியே யுனைவணங்கும் நல்லவருக் கருள்புரிந்து
மண்ணில்மிடி பிணிபாவம் மாற்றிவரு கதிகொடுத்து
எண்ணரிய கயிலையிற்பின் னேகுகெனவிடை கொடுத்தார்.

கொடுத்தவிடை தனைவாங்கிக் குளகர்பதந் தொழுதிறைஞ்சி
வடுத்திகழும் விழிமடவாள் வன்னக்கோடிக் கரையில்வந்து
அடுத்தவர்க ளனைவருக்கு மங்கிருந்து விடைகொடுத்து
சுடர்க்கொடியெங் கண்ணகையார் தொல்லிலங்கை
தன்னில்வந்தார்.

இலங்கைநகர் தன்னில்வந்தும் இலங்குநல்ல விடத்திருந்தும்
இலங்குதலந் தனில்வணங்கும் யாவருக்கும் விடைகொடுத்து
வலம்புரிந்து தலங்களிலே வணங்கினீரேல் வருவெனென்று
வலங்கொளயில் விழிமடவாள் வற்றுப்பளை மேவினரே.

மேவுமங்கே பசுவினத்தை மேய்த்துவருஞ் சிறுவர்பலர்
தாவுசிறு விளையாட்டாய்த் தாங்கள்சிறு கோயில்கட்டி
ஆவினும்பா லடிசிலிட்டு அரியமரத் திலைகனிகாய்
பூவுடனே பூசைசெய்யப் பொற்கொடியார் தோன்றினரே.

தோன்றிடும் வைகாசித்திங்கள் சூழ்வியாகம் பூரணையில்
தோன்றினளே தடதடத்துத் துணைவிழிக ளிமைத்திமைத்துத்

தோன்றினளே நரைத்தலையும் துய்யபல்லு மில்லாமல்
தோன்றுமொரு கிழவியைப்போற் தோன்றிடவச் சிறுவர்கண்டார்.

கண்டவுட னதிசயித்துக் காரியமென் னம்மையுன்னைக்
கண்டதில்லை யென்றுமிங்கே கருதிவந்த காரணமென்
கண்டவய தொருநூறோ கால்நடையுந் தடதடக்கக்
கண்டோநா மின்றுமையே கருதுமூர்பே ருரையுமம்மா.

உரையுமம்மா வென்றளவில் லோதுவளே கண்ணகையும்
உரைசிறந்த சிறுவர்களே யூரெனக்குச் சோழநகர்
உரைபெருகு கதிர்காம முற்றிடவிவ் வழியில்வந்தேன்
உரைத்திடுமிப் பூசைசெய்ய உற்றதென்ன செப்புமென்றார்.

செப்புமென்ற அளவைதன்னிற் சிறுவர்கள்கேட் டகமகிழ்ந்து
செப்பிடுவார் மாதாவே சிறுவர்கள்யாம் விளையாட்டாய்ச்
செப்பநின்ற பொங்கல்பூசை செய்தனமென் றுரைத்தளவிற்
செப்பினள்பின் சிறுவர்களே திருவிளக்கு மேற்றுமென்றே.

ஏற்றுமென்ற சமயமதில் லெண்ணையில்லை யெனமொழிய
ஏற்றமுள்ள சிறுவர்களே யிந்தநந்திக் கழியிலுற்று
ஏற்றநீரை யள்ளிவந்து ஏற்றிடுவீ ரென்றவுடன்
ஏற்றமுடன் சிறுவருநீர்க் கேகியள்ளி மீண்டனரே.

மீண்டுமிந்த நீர்தனிலே விளக்கெரிந்த புதுமைகண்டு
ஆண்டவளிங் கிவளெனவே யடிபணிந்து தொழுதுநிற்கப்
பூண்டஅன்பிற் சிறுவர்களின்மேற் பொற்கொடியும் விழிநோக்கி
ஈண்டுமக்கோ ரிரகசியம் இயம்பிடுவே னெனமொழிந்தாள்.

மொழிந்திடுவேன் சிறுவர்களே முன்னுமென்பேர் கண்ணகைகாண்
மொழிந்தவிந்த மாதமதில் முதுகலைசேர் பூரணையில்
மொழிந்ததிங்கட் கிழமைதனில் முன்னமுறு வியாகமதில்
மொழிந்தகும்ப மேற்றிநல்ல முறைப்படியே பூசைசெய்தால்.

செய்திடுகில் வந்திடுவேன் தெண்டமிட்டோ ரெல்லோர்க்குஞ்
செய்யநல்ல வரங்கொடுப்பேன் சீரின்முத்தி சேர்த்திடுவேன்
செய்யுமெய்யென் றுரைத்தளவிற் சிறுவர்கள்கேட் டுளமுருகிச்
செய்சிறுவ ரெமையடிமை சேர்த்தருளு மெனப்பணிந்தார்.

பணிந்திரந்த பிள்ளைகட்குப் பாக்கியமுங் கீர்த்திகளும்
பணிவினல்ல மனமகிழ்வும் பண்பினல்ல சிறுவர்களும்
அணியணியா யெனைத்தொழுதா லாகுமுங்கட் கெனவுரைத்தும்
தணியும்பிணி யெனவுரைத்து தற்பரியாள் மறைந்தனளே.

மறைந்துசென்று வன்னிநகர் மனத்திசைந்த தலமிருந்தும்
அறிந்துவணங் கினவர்களுக்கு கானநல்லவரங் கொடுத்தும்
மறைந்துநல்ல கதிர்காம மலையகத்தி னிடமருவிச்
சிறந்தமயி லூர்பரனும் தெண்டனிடச் சிறந்திருந்தும்.

இருந்துதனைப் போற்றுநர்க்கு மேகுமந்தத் தலங்களிலும்
இருந்ததொண்டர் மனமதென்ற மேர்கமலக் கோயிலினும்
இருந்துமந்தத் தலங்களினும் யாவரேனும் விருப்புடனே
இருந்துதலம் பூசிப்பரே லேற்றுமனப் பூரணமாய்.

பூரணமாய் வினைகளெல்லாம் போக்கியரு னோக்கமுற்றும்
பூரணமா ஞானவொளி போனவிழிப் புலனுறவும்
பூரணமாய் வனமுதலாம் புலவர்களு மடிவணங்க
பூரணனா ருறைகயிலைப் பூரணியு மேவினளே.

மேவுமிந்தக் கண்ணகையை விரும்பியிந்தப் பூதலத்தில்
மேவுமெவர் தொழுதாலும் வினையகற்றி நலம்புகுத்தி
மேவுமவர் மனமலையில் மேவியாவி யுடனிருந்தும்
மேவிவட கயிலையிலே விருப்புடனே யிருத்துவளே.

இருக்குமுதல் வேதமெல்லா மீன்றுவைத்த தாயாரை
இருக்குமிந்த வுலகினையும் மீன்றபெரு மாதாவை
இருக்குமுயிர்த் தோற்றத்தையும் மீன்றதிரு வுருவிவளை
இருக்குமுதற் றுதித்திடவு மெப்பாவின் மேவிடுமே.

பாவினிசை கொண்டிதனைப் படித்தவர்கள் பயனுரைத்தோர்
பாவினுடனே கேட்டுப் பக்தியுற்று மகிழ்ந்தார்கள்.
பாவின்மொழிக் கண்ணகையார் பக்திமுத்தி யிருப்பார்களே
பாவினமும் கலையினமும் பலநாளும் பெருகிடுமே.

பெருகுவேத முடன்கலைகள் பெருகிமிக வாழ்வதுவே
பெருகுசிவ சமயஞானம் பேரரசர் நீதிபசு
பெருகுமதி மழை மூன்றும் பேரருளின் வாழ்கவென்றும்
பெருகுலகந் திருவுடனே பேரறமும் வாழியதே.

## விருத்தம்
## 'பரமபதி துணை'

அன்றுதொட்டின்றளவு மடியேனையாழ்கின்ற
வருளுக்களிக்கு முதவி
யானதொன்றில்லை யென்நாளுமுன்றன்
மனதிலாசைகொண் டுன்னுதற்காய்
இன்றுதொட்டிதுகதைக் குறைவிரித்தே
சொன்னதிதுவு முன்னருளிலொன்றே
ஏகாந்தரூபிகவு மாரியருளானந்த விறையவனிடக் கொழுந்தே
மன்றுளாடியபரமனருளு முன்னருளுமென
மனமலையி னடமாடியே
வாழ்வுதவியேமுத்தி நாளுதவியென்றும்
வழித்தொண்டளித் தருளுவாய்
என்றுமானிலமகிழ்விக்க விக்கதைபரப்பியே
யாவரும்புகழ வருள்வாய்
ஏகமுறுதேவியே நாகர்பதிமேவியே
யெண்ணில்கண்ணகை யம்மனே.

இக்குளிர்ச்சிப் பாடல்கள் படிக்கப்படும் பொழுது அம்பாளின் பெண் அடியார்கள் அம்மனைக் குளிர்விக்க வேண்டி ஆலயக் கிணற்றிலிருந்து குடங்களில் நீர் நிரப்பி ஆலயத்தைச் சுற்றி ஊற்றித் தாங்களும் அம்மனைக் குளிர்விக்க வேண்டுவதாக தங்கள் நேர்த்தியை நிறைவேற்றுவர். இப்படியாக நீர் ஊற்றி அம்மாளாச்சியை வேண்டினால் அம்மாளாச்சி தம்மீது எப்பொழுதும் அன்புள்ளம்கொண்டவராக இருப்பார் என்பது அம்மன் அடியார்களின் அசையாத நம்பிக்கையாகும்.

குளிர்ச்சி படிக்கும் நேரத்தில் வழிவெட்டல் அல்லது வழிவிடல் கிரியைக்கு வேண்டிய ஆயத்தங்கள் உரிய அடியார்களால் மேற்கொள்ளப்படும். அதாவது வழி வெட்டு மிடத்தில் வைக்கப்படும் இரண்டு வகையான காளாஞ்சிப் பொருட்கள் ஆயத்தம் செய்யப்படும். முதலாவது இடத்தில் வைக்கப்படும் காளாஞ்சிப் பொருட்கள் நிர்மாலியப் படாதவை யாகவும், இரண்டாவது இடத்தில் வைக்கப்படும் காளாஞ்சிப் பொருட்கள் நிர்மாலியப்பட்டவையாகவும் இருக்கும். அதாவது மடை பரவுவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட வெற்றிலை, பாக்கு முதலான பழவகைகள், விபூதி, சந்தனம், குங்குமம் முதலான பொருட்கள் ஒரு பாத்திரத்திலும்

மடையிலி ருந்து எடுக்கப்பட்ட மேற்குறித்த வகையான பொருட்கள் இன்னுமொரு பாத்திரத்திலும் ஆயத்தம் செய்து வைக்கப்படும்.

குளிர்ச்சிப் பாடல்களைப் படித்து நிறைவடைந்ததும் தேங்காய் உடைத்து வெற்றிலை பாக்கு வாழைப்பழம் வைத்து கற்பூரத்தீப ஆராதனை செய்து குணமான கண்ணகையை கோவலனார் தான் மணஞ்செய், என்று ஆரம்பிக்கின்ற காப்பினை இசைத்து அதன் பின்னர் கோவலர் கதை ஏட்டினை ஒழுங்காக அடுக்கிக் கட்டி அதற்குரிய பீடத்தில் பட்டுவஸ்திரத்தின்மேல் வைக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து ஆலயத்தினுள் செல்லும் பூசகர் கற்பூர ஆராதனை செய்தபின்னர் வழிவெட்டடல், அல்லது வழிவிடல் என்ற பத்ததிமுறைக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார். நான்காம் மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் கும்பத்திற்கு பாக்கு, வெற்றிலை பழம்வைத்து நிவேதனம் செய்து கற்பூரஆராதனை மேற்கொண்ட பின் அக் கும்பத்தினைச் சுற்றி வளர்ந்துள்ள நவதானியப் பயிருடன் அக் கும்பத்தினைப் பெயர்த்து அதற்கு அளவான மூடலில் அதனை வைத்து அக்கும்பத்தைச் சுமந்து செல்கின்ற பேற்றினைப் பெற்ற குடும்பத்தின் உரிமையாளரின் தோள்மீது அக்கும்பத்தினை வைப்பார். அடுத்து ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருக்கின்ற அம்மன் கும்பத்தினை அதற்கும் அளவான மூடலில் வைத்து புத்தக நியமகாரரின் தோள் மீது வைப்பர். இக் கும்பத்தின் பாரம் சாதாரணமாக அதற்குரிய பாரத்திலும் பார்க்க மிகக்கூடிய பாரமுடையதாக இருப்பதாக இக் கும்பத்தினைச் சுமந்த அடியார்களினால் நாம் அறிய முடிகிறது. இதுவும் இப் பொங்கல் கிரியைகளில் அம்மனின் வெளிப்படையான திருவருள் என்பதை எம்மால் அறிய முடிகின்றது. அடுத்து முத்தரிசி, சிலம்பு, அம்மானை, வேப்பம் பத்திரம் ஆகியவையைக் கொண்ட மூடல் அதற்கென நியமிக்கப்பட்ட உரிமையாளரிடம் கொடுப்பார்.

அத்துடன் எழுந்தருளியில் உள்ள மாலையொன்றையும் வழிவெட்டுமிடத்தில் நிவேதனம் செய்வதற்கு மடையிலிருந்து எடுக்கப்பட்ட காளாஞ்சிப் பொருட்களுடன் சேர்ப்பதற்காகக் கொடுப்பார். முன்னரே ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் வழிவெட்டுதலுக்குரிய காளாஞ்சிப் பொருட்களும் தேவையான மடையில் எடுக்கப்படும் தேசிக்காயையும் சேர்த்து பொருத்தமான அடியார்களிடம் உரிய கடமை செய்பவரால் கொடுக்கப்படுவதுடன் வெட்டுதற்குரிய மூன்று இளநீர் கொடுக்கப்படும். இச் சந்தர்ப்பத்தில் பூசகர் பரவசநிலையை அடைந்தவராக நிற்பார். பரவசநிலையில்

நிற்கும் பூசகர் இரண்டு சிலம்பு, அம்மானை, சூலம், இரும்புப்பொல் ஆகியவற்றினை வேப்பம் பத்திரத்துடன் சேர்த்து எடுத்துக் கொண்டு ஆலயத்தைப் பார்த்தவாறு பின்புறமாக நடந்து செல்ல ஏனையோரும் அதேமுறையில் அவரைப் பின்தொடர்ந்து செல்வர். வழிவெட்டுமிடத்தில் இளநீர் வெட்டும் கத்தியும் உரியவரால் கொண்டு செல்லப்படும். ஆலயத்தின் ஐந்தாவது மண்டபத்தின் வெளியே வந்ததும் பூசகர் திரும்பி முன்னோக்கு வடகிழக்குத் திசையை நோக்கி வேகமாகச் செல்ல அவர் செல்லும் வேகத்திற்கு அமைவாகப் பறை ஒலியும் எழுப்பப்படும். ஆலயத்தின் கிழக்கே அமைந்துள்ள வீதியைக் கடந்து ஓர் இடத்தில் நீர் தெளித்துச் பூமி சுத்தம் செய்து அவ்விடத்தில் சூலத்தை ஸ்தாபனம் செய்து அதன் முன்பாக பத்ததியில் உள்ள யந்திரத்தினை இரும்புப் பொல்லினால் எழுதி அதன் மேல் வெள்ளை விரித்து வெள்ளை மீது நீர் தெளித்து சுத்தம் செய்து இரண்டு சிலம்புகளையும், அம்மானையும், இரும்புப் பொல்லையும் அதன் மீது வைத்தபின் அபிஷேகம் செய்து விபூதி, சந்தனம், குங்குமம் சாத்தியபின் நிர்மாலியப்படாத வெற்றிலை பாக்குடன் பழவகைகள் ஏனைய நிவேதனப் பொருட்கள் ஆகிய காளாஞ்சிப் பொருட்களை மூன்று இடங்களில் வைத்து மலர் தூவி பூசை செய்து நிவேதனம் செய்து கற்பூர ஆராதனை செய்யப்படும். இவ்விடத்திலிருந்து ஒரு சிலம்பையும், இரும்புப் பொல்லையும் எடுத்துக்கொண்டு சிறிது தூரம் வடக்கு நோக்கிச் சென்று ஓர் இடத்தில் நீர் தெளித்துப் பூமி சுத்தம் செய்து அதன் மீது உரிய யந்திரத்தினை எழுதி அதன் மேல் வெள்ளை விரித்து நீர் தெளித்து சுத்தி செய்து அதன் மேல் சிலம்பையும் இரும்புப் பொல்லினையும் முத்தரிசியுடன் வைக்கப்பட்டதும் விபூதி, சந்தனம், குங்குமம் சாத்தி நிர்மாலியப்பட்ட பொருட்களிலான காளாஞ்சியை வைத்து மூன்று இளநீர்களையும் வைத்து அதன் மேல் ஒவ்வொரு தேசிக்காயையும் வைக்கப்பட்ட பின், நிவேதனம் செய்யப்பட்டு கற்பூர ஆராதனை நடைபெறும். இதனைத் தொடர்ந்து முத்தரிசி மூடலை எடுத்து முத்தரிசி எறிந்து அதன் பின்னர் நீர் தெளிக்கப்படும். இதன் பின்னர் சிலம்பினையும் இரும்புப் பொல்லினையும் பூசகர் கையில் எடுத்ததும் தேசிக்காயையும், இளநீரையும் ஒரே வெட்டில் இருபாதியாகுமாறு உரியவர் மூன்று இளநீர்களையும் வெட்டுவார். இத்துடன் பூசகர் பரவசநிலையிலிருந்து தெளிவடைந்து ஆலயத்தை நோக்கி வந்து வெளிக்கிணற்றில் தோய்ந்த பின்னர் சிலம்புகள், அம்மானை, சூலம், இரும்புப்பொல் ஆகியவற்றினை உரிய இடத்தில் ஸ்தாபனம் செய்தபின் எழுந்தருளிச் சூலத்தினை எடுத்துக்கொண்டு ஆலயத்தினை நான்குமுறை வலம் வந்த

பின், நாகதம்பிரான் ஆலயக் கேணிக்கு தீர்த்தம் ஆடுவதற்குச் செல்வார். இப்பொழுது ஏற்கனவே கொண்டு செல்லப்பட்ட கும்பங்களுடன் படிக்கப்பட்டு புத்தகம் கட்டப்பட்ட ஏட்டினை அதற்கு உரியவர் தோழில் சுமந்து கொண்டு செல்ல அடியார்களும் இவர்களைத் தொடர்ந்து தீர்த்தக் கேணிக் கரைக்குச் செல்வர். பூசகர் கேணியில் இறங்கி கிழக்கு நோக்கி சூலத்துடன் நிற்க கும்பத்துடன் நிற்கும் இருவரும் அவரை மூன்று முறை வலம்வந்தபின் மூவரும் நீரில் மூழ்கி தீர்த்தமாடுவர். அடியார்களும் தீர்த்தத்தினை கையினால் அள்ளிப்பருகியும் தலைமீது தெளித்தும் ஏனைய அடியார்களுக்குத் தெளித்தும் தீர்த்தமாடுவர். இத்துடன் தீர்த்தமாடல் நிறைவடையும். எடுத்துவரப்பட்ட ஏடு நாகதம்பிரான் ஆலய வாசலில் வைக்கப்படும். எல்லோரும் அம்பாள் ஆலயத்தைச் சென்றடைவர். பூசகர் உடைமாற்றிச் சந்தியா வந்தனம் முடித்துக் கொண்டு கற்பூர ஆராதனை செய்து சண்டேஸ்வரர் பூசையை மேற்கொள்வார். இத்துடன் பொங்கல் நாள் பூசைகள் யாவும் நிறைவடையும்.

இதன் பின்னர் அடியார்களுக்கு விபூதி, தீர்த்தம் முதலான பிரசாதங்கள் வழங்கப்படும். அத்துடன் அடியார்கள் மிகவும் விருப்பத்துடன் பெறுகின்ற "வேளையும்" கொடுக்கப்படும் வேளையென்பதும் வெள்ளைச் சீலையை நூல்போலக் கையில் கட்டக்கூடிய அளவில் கிழித்து மஞ்சள் கரைத்த நீரில் தோய்த்து பூசையில் வைத்து அடியார்கள் அணியக் கொடுப்பதாகும். இதனைக் கட்டியிருக்கின்ற காலத்தில் அம்மனின் திருவருள் அணிந்தருவருக்கு எப்பொழுதும் இருக்கும் எனவும் அம்மன் நோய்கள் எதுவும் அவரை அணுகாது என்பதும் அடியார்களின் நம்பிக்கையாகும்.

அடியார்கள் பிரசாதம்பெற்று தத்தமது வீடுகளுக்குச் சென்ற பின் பூசகரும் புத்தக நியமகாரரும் முக்கியமான சில தொண்டர்களும் ஆலயத்தை சுத்தம் செய்து நீர் தெளித்த பின், ஆலயக் கதவினைத் திருக்காப்புச் செய்து பூசகரை அவரின் இல்லத்திற்கு அழைத்துச் செல்ல ஆயத்தாமாவார். முன்னரே எடுத்து வைக்கப்பட்டிருந்த பழவகைகளை எடுத்துக்கொண்டு நாகதம்பிரான் ஆலயத்தை அடைந்து அப்பழவகைகளை நாகதம்பிரான் ஆலயத்தில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற மூர்த்திகளுக்கு ஆலயத்திற்கு வெளிப்பகுதியில் வைத்து நிவேதனம் செய்தபின் ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற கோவலர் கதை ஏட்டையும் எடுத்துக்கொண்டு பூசகரின் வீட்டினைச் சென்றடைவர். இதே நேரத்தில் நாகர்கோவில்

வடக்கைச் சேர்ந்த அம்பாளின் முக்கிய அடியார்கள் சிலர் முன்னரே எடுத்துவைக்கப்பட்டுள்ள பழவகைகளை அம்மன் ஆலயத்திற்கு வடபால் அமைந்துள்ள நரசிம்மவைரவர் ஆலயத்தில் வைத்து நிவேதனம் செய்தபின் தமது வீட்டினைச் சென்றடைவர். பூசகர் வீட்டிற்குச் சென்றிருந்த தொண்டர்களுக்குத் தேநீர் சிற்றுண்டிவகைகள் பரிமாறப்பட்ட பின் அவர்களும் தத்தமது வீட்டினைச் சென்றடைவர். இத்துடன் வருடாந்த வைகாசிப் பொங்கல் மங்களகரமாக நிறைவடையும்.

இப்பொங்கல் நிறைவடைந்து பதின்நான்கு நாட்கள் வரை ஆலயத் திற்கு எவரும் செல்ல மாட்டார்கள். வழமையாக நடைபெறும் திங்கட்கிழமைப்பூசைகூட ஒரு திங்கட் கிழமை நடைபெறாது. பதின்நான்காவது நாளான ஞாயிற்றுக்கிழமை மாலை நேரம் காப்புச் சொல்லல் நடைபெற்ற திங்கள் கிழமையன்று போல் பூசகரும் முக்கிய தொண்டர்களும் ஆலயத்திற்கு வந்து ஆலயத்தினைச் சுத்தம் செய்து விளக்கேற்றி அமுது, பழம், பாக்கு வெற்றிலை வைத்துப் பூசை செய்து கோவலர் கதையில் சிலம்பு கூறல் பகுதியிலிருந்து திரும்பவும் இரவு முழுவதும் படிப்பர். ஏனைய நிகழ்வுகளும் பொங்கல் நாளில் நடைபெறுவது போலத் திங்கட் கிழமை நடைபெறும். வழந்து நேர்வதில்லை ஆனால் பொங்கப்படும் குளிர்த்தி படிக்கப்படும். வழிவெட்டல், தீர்த்தமாடல் என்பன நடைபெறமாட்டாது.

மேற்குறிப்பிட்டவைகள் வருடாந்தப் பொங்கல் சம்பந்தமான நிகழ்வுகளாகும். ஆரம்பகாலத்தில் மூலஸ்தானத்தில் மூன்று சிலம்பும், மூன்று அம்மானையும், வைரவர், காத்தவராயரையும் வைத்து திங்கட் கிழமை பூசையும் வருடாந்தப் பொங்கலும் மட்டும் நடைபெற்று வந்த இவ்வாலயம் சீமெந்துக் கற்களால் கட்டப்பட்டு 27.04.1978 இல் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றபோதும் அதன்பின்னரும் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. கருங்கல்லினால் அமைக்கப்பட்ட விநாயகர் லிங்கம் 2ஆம் மண்டபத்தின் வலப்புறத்திலும் பஞ்சலோகத்தி னால் அமைக்கப்பட்ட அம்மன் திருவுரு மூலஸ்தானத்திலும் பிரதிஸ்டை செய்யப்பட்டது. 1993 ஆம் ஆண்டு முன்னைய பூசகர் மு.ச. வல்லிபுரநாதர் அவர்கட்கு நாகதம்பிரான் இவ்வாலயத்தில் காட்சி கொடுத்ததைத் தொடர்ந்து 1994ஆம் ஆண்டு கும்பாபிஷேக தினத்தன்று பஞ்சலோகத்தினால் வடிவமைக்கப்பட்ட ஐந்து தலை நாகபடம் 2ஆம் மண்டபத்தின் இடப்புறத்திலும் பிரதிட்டை

செய்யப்பட்டது. ஆரம்பத்தில் மூன்று வளந்துகள் வைக்கப்பட்டது. தற்போது ஐந்து வளந்துகள் வைக்கப்படுகிறது.

அம்மனின் அருளாட்சி பெற்றுள்ள இப்பிரதேசத்தில் சின்னமுத்து, பொக்குளிப்பான், கண்ணோய் போன்ற தொற்று நோய்கள் ஏற்பட்டால் நாகர்கோவில் வடக்கு மக்கள், காத்தவராயன் நாடகம், கோவலன் கண்ணகை நாடகம் போன்ற நாடகங்களை அம்மன் கோவில் முன்றலில் நடாத்தி தமது காணிக்கையைச் செலுத்துவர். அந்நோய் இப் பிரதேசத்திலிருந்து மறைந்துவிடும். இது அம்பாளின் புதுமையாகும்.

இவ் ஆக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் இவ் ஆலயத்தின் மிக நீண்டகாலப் பூசகரும் ஆசிரியருமான திரு. மு. ச. வல்லிபுர நாதரினால் எழுதி வைக்கப்பட்டிருந்த குறிப்புகளிலிருந்தும் பூர்வீக நாகதம்பிரான் ஆலய பரம்பரைத் தர்மகர்த்தா திரு. மு. சிதம்பரப்பிள்ளை அவர்கள் வழங்கிய தகவல்களிலிருந்தும் பெறப்பட்டதுடன் எழுதுவதற்குரிய ஆலோசனையைத் தற்போதய பூசகரும் ஆலய பரிபாலன கர்த்தாவுமாகிய ஓய்வு பெற்ற மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளருமான திரு.வ. பத்மநாதன் அவர்கள் வழங்கியுள்ளார். மேலும் இவ்வாக்கத்தில் ஏதாவது தவறுகள் இருப்பின் அவற்றை மன்னித்து ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**அ.அ. நடராசா – குடாரப்பு**
*ஓய்வு நிலைச் செயலாளர்*
*பருத்தித்துறை பிரதேசசபை,*
*பருத்தித்துறை நகரசபை.*

ஓம் நமசிவாய

**கண்ணகாதேவி துணை**

திருச்சிற்றம்பலம்

# நாகர்கோவில் கண்ணகை அம்மன் திருஊஞ்சல் பதிகம்

## வெண்பா

திரு மிகுந்திடு நாகநன்னகரிடைச் சிறந்தே
அருள் மிகுந்திடு கண்ணகையம்மனையேத்தி- மருவாரும்
ஊஞ்சலிசை பாடவுள நின்றருள் புரியும்
காஞ்சனத் தெங் கரிமுகனே காப்பு.

## எச்சரிக்கை

| | |
|---|---|
| சீரால மலிநாகர் பதிசேர்ந்தாய் | எச்சரிக்கை |
| செகமேவிடு மன்பர்க்கருள் தேவி | எச்சரிக்கை |
| காரார் குழலுமையே யெங்கள் தாயே | எச்சரிக்கை |
| கறைக் கண்டனதிடப் பாலுறை கன்னி | எச்சரிக்கை |
| தேரார்களை யெரி செய்திடு தேவி | எச்சரிக்கை |
| தினமே தொழுமடியார் வினை தீர்ப்பாய் | எச்சரிக்கை |
| பாரார் புகழ்ந்தேத்த வருள்புரிவாய் | எச்சரிக்கை |
| பரலோகமு மெளிதாயருள்பரையே | எச்சரிக்கை |

## பராக்கு

| | |
|---|---|
| சோழநகர் வணிகர்குலக் கொழுந்தே | பராக்கு |
| சொற்பதமுங் கடந்து நின்ற சடரே | பராக்கு |
| வேழமுடைப் பாண்டியனை வென்றாய் | பராக்கு |
| வெய்யவினை நீக்கியருள் விமலை | பராக்கு |
| காழகண்டர் பாகமுறை கன்னி | பராக்கு |
| கருதரிய ஞானமுத்திக் கனியே | பராக்கு |
| ஈழமண்டலத்தில் வந்த விறைவி | பராக்கு |
| இனிய நாகர் பதியிலுறை கண்ணகையே | பராக்கு |

## லாலி

ஆதிலாலி யிறை பாதி லாலி யெமை
ஆண்டருள வந்தவுமை அம்மை லாலி
சோதி லாலி யருட்தேவி லாலி நல்ல
தொண்டருளக் கோயில் கொண்டவன்னை லாலி
அன்னை லாலி மலைக் கன்னி லாலி எம்மை
ஆட்டுவிக்க மீசரிடத் தம்மை லாலி
நன்மை லாலி யருட் செம்மை லாலி எங்கள்
நாகர்பதிக் கண்ணகை யருள் மெத்த லாலி

## திருஊஞ்சல்

1. சீர்மேவு நாகர்பதி தன்னிலோர் பாற்
சிறந்தொழிரு மருதமொடு நெய்தல் சேர்ந்தே
கார் மேவு கற்பகம் போற் கவினம் பூத்துக்
கனியுதவி யோங்கி நிற்குஞ் சம்பு நெல்லி
ஏர்மேவு மதுகமொடு தாழை நிம்பம்
எழில் மிகுந்த வால மோடியைந்த சோலை
ஊர்மேவு கண்ணகை மேலூஞ்சல் பாட
உகந்த தும்பி மாமுகரே காப்பதாமே.

2. திருமிகு நன் நவமணிகள மைத்துச் செய்த
திடபமிகு சிகர மண்டபத்தி னூடே
உருமிகுந்த நான்மறையே நூண்களாக்கி
உயர்ந்த கலை ஞானமதே வளைய தாக்கி
அருமைமிகு சிவாகமங்கள் கயிற தாக்கி
அரிய பிரணவமான பீடத்தேற்றி
தரும மிகு நாகர்பதி தன்னில் மேவும்
தாயான கண்ணகையே யாடீரூஞ்சல்

3. விண்மேவு மரம்பை யொடூர்வசியுங் கூட
மேன கையுந் திலோத்தமையுங் கயிறுபற்றி
பண்மேவு பாவிசைத்தே யூஞ்சலாட்ட
பாவு சயமகளோடு நாமகளும் வாழ்த்த
எண்மேவு மரம்பையர் சாமரமிரட்ட
இலங்கெழி லாசனத்தை விட்டே யெம்மைக் காக்க
மண்மேவு நாகர்பதி தன்னில் வந்தாய்
மாது கண்ணகைத் தாயே யாடீரூஞ்சல்

4. ஓங்குமுயிர்க் குயிராளே யாடீரூஞ்சல்
உத்தமி பற்பல வடிவே யாடீரூஞ்சல்
மாங்கனியா யுதித்தவளே யாடீரூஞ்சல்
வணிகர் குலந் தன்னில் வளர்ந்தீ ராடீரூஞ்சல்
தேங்கமழும் வைகை நன்னாடதனில் வந்தே
செழியனோடு வழக்குரைத்த தேவியுன்னை
நாங்களுமோர் வடிவமைத்தே வணங்க நாகர்
நகர் வந்த கண்ணகையே யாடீரூஞ்சல்

5. விண்ணகத்தார் பாட்டிசைப்ப வாடீரூஞ்சல்
விளங்கு செம்பொன் வளையாரே யாடீரூஞ்சல்
மண்ணகத்தார் வழுத்தியிட வாடீரூஞ்சல்
மாவடுவாங் கன்னியரே யாடீரூஞ்சல்
கண்ணகத்தெம் மணியாரே யாடீரூஞ்சல்
காண்பரியே பேரொளியே யாடீரூஞ்சல்
எண்ணமுற்றே நாகர்பதி தன்னில் வந்த
இறைவி கண்ணகையாரே யாடீரூஞ்சல்

6. சோழநகர் வணிகர்குலம் வாழ வந்த
தோகை நாயகியாரே யாடீரூஞ்சல்
'வேழமுடைப் பாண்டியனை நீதி கேட்டே
வீழ்ந்திறக்க மதுரையெரி யூட்டினாயே
காழகண்டர் கோயில் கொண்ட சேரநாட்டில்
காட்சி கொடுத்தாயரிய தேவி யுன்னை
ஈழமன்னன் கயபாகு வணங்கி யேத்த
எழுந்தருளுங் கண்ணகையே யாடீரூஞ்சல்

7. சீர்தங்கு நுதலாளே யாடீரூஞ்சல்
சிறியேமைக் கார்ப்பவளே யாடீரூஞ்சல்
கார்தங்கு குழலாளே யாடீரூஞ்சல்
கவலை தீர்த்தாள் பவரே யாடீரூஞ்சல்
வார் தங்கு முலையாரே யாடீரூஞ்சல்
வளைதங்கு கரத்தாரே யாடீரூஞ்சல்
பார்புகழுந் நாகர்பதி தன்னில் வந்த
பத்தினி கண்ணகைத் தாயே யாடீரூஞ்சல்

8. போத மடியார்க் கருள்வீ ராடீரூஞ்சல்
பொன்னொளி சேர் மேகலையீ ராடீரூஞ்சல்
நாதவிந்து மானவரே யாடீரூஞ்சல்
நான் மறையாய் நின்றவரே யாடீரூஞ்சல்

பாதகங்கள் தீர்ப்பவரே யாடீரூஞ்சல்
பத்திநெறி தரும்தாயே யாடீரூஞ்சல்
ஆதியிலே நாகர்பதி தழைக்க வந்தே
அமர்ந்த கண்ணகைத் தாயே யாடீரூஞ்சல்

9. சித்த சித்தோடீஸ்வரியு மானாய் நீயே
திகம்பரி சாமுண்டி யுமையானாய் நீயே
அத்தி மகமாரி சங்கரி கௌமாரி
அரியதிரியம்பகி சாம்பவியும் நீயே
மெத்துபுகழ் துர்க்கை கங்காளி சூலி
மேலான பைரவியும் நீயே என்றும்
பத்திபுரி யடியவர்க்காய் நாகர்கோயிற்
பதியில் வந்த கண்ணகையே யாடீரூஞ்சல்

10. அருமறையோர் முனிவர்குழா மறமும் வாழி
ஆனினமும் மாதர்கற்பு மரசும் வாழி
கருமை செறி முகில்கள் மழைபொழிந்து வாழி
காராளர் கவிவாணர் கலந்து வாழி
திருவருள்சேர் நினதடியார் பலரும் வாழி
சேர்ந்திலங்கு நாகமணிச் சிலம்பும் வாழி
வருமுறைசார் நாகர்பதி தன்னில் வந்தே
வரமருளும் கண்ணகையே வாழி வாழி


11. அருட்கடலாங் கண்ணகைக்கு மங்களம் - எங்கள்
ஆதிபராசக்தியார்க்கு மங்களம்
தெருட்டுமறை நாயகிக்கு மங்களம் - தொல்லைத்
தீவினைகள் தீர்ப்பவர்க்கு மங்களம்
கருணை மழைபொழிபவர்க்கு மங்களம் - எம்மைக்
காத்தருளுந் தேவியர்க்கு மங்களம்
அரவணையான் தங்கையர்க்கு மங்களம் - எங்கள்
ஆதிபரா பரையார்க்கு மங்களம் மங்களம் .

சுபம்

**ஆக்கியோன்**
**சிவ அன்பன் க. குமாரசாமி,**
குடாரப்பூர்.

# நாகர்கோவில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் பொங்கல் விழாக் காலத்தில் படிக்கும் கோவலர் கதை ஏடு

*குடாரப்பு கந்தர் வெற்றிவேலரினால் இயற்றப்பட்ட கோவலர் கதையைத் திரும்ப ஏட்டில் வரைந்துள்ளர். அன்பரினால் தரப்பட்டுள்ள தகவல்.*



**உ**

**கணபதி துணை**

**உலக வணக்கம்**

*ஆன்றோர்களே அடியேனீண்டு வரைந்த ஏட்டுப் பிரதியில் கதைப்பாவினத்தில் தொடர்பெழுத்து தொடரவும், தொடராதும் யானெழிதியிருப்பதை நகையிகழ்ச்சியினாண்டிலீர். ஏனெனில் அடியேன் பரீட்சித்தபடி தொடரெழுத்துச் சிலவிடமிருப்பதுண்டு. இதனை வாசிப்பவர் முதியோரிளையோருமாக வேண்டியமையினாலும் தொடரெழுத்தை வரியிற்றமுவாது சில விடங்களிலெழுதினம். முற்றந் தொடர்பிற் வரையாமை பற்றியிருப்பதென்னெனின் அடியேன்தொடர்பிற்றெழுதப்பழகினமிலம். இதனடியாந்தம் பார்க்குமிடத்து ஏடெழுதுவல்லன் அல்லனெனச் சந்திலிகாரத்தினெழுத்தமைந்திருக்கும். அஃ தியாவரும்*

வாசித்தலாக. இடையிடை படவரைந்தனம். இஃதன்று இப்பிரதியின் எழுதுங் கதைத்தளைகளின் குத்துவெட்டும் அமைந்தன. அஃதின் அடியேனை அலட்சியம் செய்யாது ஆழ்க வந்தனம். குத்துவெட்டு இங்குறுதல் ஓர் ஞாபகபதார்தாந்த சேவை செயலெனவுணர்க.

## இக்கதைக்குரிய மெய்த்தெய்வம் துதி

உ

கணபதி துணை

மண்விண்ணதிர மதுராபுரிக் கனல் மாட்டி வருங்
கண்ணாயிரம் பெறு பூரணியாரணி காரணியைப்
பண்ணார் மொழியணங் கார்க்கதிகாரியைப் பார்ப்பதியை
எண்ணாதவர் மனமெல்லோனிலா வெல்வெனப்படுமே.

சந்தமந்தி குலைக்குதை தெங்கினஞ் சார்பழனங்
கொந்தலர் மாமருதெட விழோடை குடாரப்பினான்
கந்தர் தவத்தனையன் வெற்றிவேன் முற்கதைக்கிணையாச்
செந்தமிழின் தாளிசைச் சிந்தடிப் பாமிகச் செப்பின்னே.

ஈண்டு காட்டப்பட்ட கதைகளின் அடித்தொடைக் கிலக்கணமின்னது என்பது அபிப்பிராயம். ஆயினும் ஆக்கியோன் பதப்பிரபந்தங்களின் அமையாது அமையக்காட்டுவாம்.

இவ் ஏட்டுப்பிரதியின் இயல்பு
நற்றவமிகுத் தாறுமுகனருளால் குணாசுதன் நாகர்பதிமேவு
தரன் நற்கணபதிப்பிள்ளை யெற்கிதனை மும்மதியினன்
றெழுதுமென்றமையினால் வெற்றிவேலன் சொற்றதிற்
சில திருத்தினேன். மேலுந் திருத்திவைப்பேன், வீண்பழுதிலேன்
பொழுதினான் றழுவிலயனமாம். மிகுதியிற் புகுதலஃகுதும்
சற்றுமன்பில்லாத சிற்றறிவினர்கியான் சாற்றுவது மேற்றிடாது
சந்தமிகுபாவினஞ் சிந்தியதனைக் குறைவு சந்தபேதம்
மிதேதம். கற்றறிவினர்க்கு கரும்புபோலாமிகுதி
கற்றறிவிலார்க் கரம்பைக் கனியெனக் காணுநல்லார்க்
கமிர்தமாகு மிக் கதையடித் தோடை காணிலே.



1933 முதல் 1987 வரை அம்பாளின் பூசகராகவும் பரிபாலன கர்த்தாவாகவும் பணி செய்த
திரு. மு. ச. வல்லிபுரநாதர் ஆசிரியர் அவர்கள்



ஆலய பூசகரும் பரிபாலன கர்த்தாவுமான
திரு. மு. ச. வல்லிபுரநாதரும் அவரது பாரியாரும்

31.08.2014 ஞாயிற்றுக்கிழமை

நடைபெற்ற மஹா கும்பாபிஷேக நிகழ்வின்

பதிவுகள்































பணி ஆரம்பம்
19-10-2013

























நாகர்கோவில் அருள்மிகு கண்ணகை அம்மன் கட்டடப்பணியை கவினுற அமைத்த ஏழாலை கிழக்கு. ஏழாலையைச் சேர்ந்த **தெய்வேந்திரம் ஈஸ்வரன்** அவர்களுக்கு ஆலயநிர்வாகத்தினர் **“ வைரக்கல் ஆயன வேந்தன் ”** என்னும் பட்டத்தினை வழங்கி கௌரவிக்கின்றனர்.






























## நாகர் கோவில்

# அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2014

**காலம்:**
ஆவணித்திங்கள் 15ஆம் நாள்
(31-08-2014)
ஞாயிற்றுக்கிழமை

திருச்சிற்றம்பலம்
[illegible]
திருச்சிற்றம்பலம்

**நேரம்**
காலை 8.00 மணி
முதல் 9.00 மணி வரை

அம்பாள் அடியார்களே! இலங்கைத் தீவின் வடபால மருதம், முல்லை, பாலை, நெய்தல் என்று கூறப்படுகின்ற நாலவகை நில அமைப்பைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் நாகர் கோவில் என்னும் நாகர் பதியிலே தன்னை நாடிவரும் அடியவர்களின் விசேடமாக சின்னமுத்து, பொக்குளிப்பான், கண்நோய் போன்ற நோய் நொடிகளை நீக்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கண்ணகை அம்மன் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு அம்பாளின் பேரருளாலும் அடியவர்களின் அளப்பரிய பங்களிப்பினாலும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கை கூடியுள்ளது.

நிகழும் மங்களகரமான ஜய வருடம் ஆவணித்திங்கள் 15ஆம் நாள் (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையுள்ள கன்னி லக்கின சுபவேளையில் விநாயகர், நாகதம்பிரான், வைரவர், காத்தவராயர் ஆகிய பரிவாரமூர்த்திகளுக்கும் மூலமூர்த்தி நாகர் கோவில் அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மனுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இறையருள் கூடியுள்ளது. அடியார்கள் யாவரும் வருகை தந்து கண்ணகை அம்பாளின் பேரருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## கிரியா கால நிகழ்வுகள்

**ஆவணித்திங்கள் 13ஆம் நாள் (29.08.2014) வெள்ளிக்கிழமை**

காலை 06.05 மணி முதல் 07.30 மணி வரையுள்ள சிம்ம லக்கினத்தில் கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம். விநாயகர் வழிபாடு, தேவ பிராமண அனுக்ஞை, திரவிய சுத்தி, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், நந்தியாகம், சங்கிரகணம், வேதஸ்தோத்திர பாராயணம், திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம் வழங்குதல்.

29.08.2014 வெள்ளிக்கிழமை நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தில் விசேட பூஜைகள் நடைபெற்று கும்பாபிஷேக பிரதம குரு நாகர் கோவில் கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்.

மாலை 4.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, கிராம சாந்தி, பிரவேச பலி, மிருத்சங்கிரகணம், கோபூஜை, கோவாசம், பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷணம், அங்குரார்ப்பணம், ஆசார்ய ரக்ஷாபந்தனம், கும்பயாகசாலை பிரவேசம், யாகபூஜை, அக்னி விகர்ஜனம், ஹோமம், பூர்ணாகுதி, யாக தீபாராதனை, தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், வேதஸ்தோத்திர பாராயணம், திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம் வழங்குதல்.

**ஆவணித்திங்கள் 14ஆம் நாள் (30.08.2014) சனிக்கிழமை**

காலை 8.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, ஆசார்ய விசேட சாந்தி, தைலாப்யங்கம், யாகபூஜை, பஞ்சகவ்யாபிஷேகம், அஷ்டோத்தரஹோமம், திரவிய ஹோமம், வேதஸ்தோத்திர பாராயணம், திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம் வழங்குதல்.

**30.08.2014 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும்.**

மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, பஞ்சகவ்யபூஜை, விம்பசுத்தி பூஜை, விம்பரக்ஷாபந்தனம், யாகபூஜை, பூர்வசந்தானம் (விம்பநியாசம்), ஹோமம், பரிசந்தானம் (ஸ்பரிசாகுதி), வேதஸ்தோத்திர பாராயணம், திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம் வழங்குதல்.

**ஆவணித்திங்கள் 15ஆம் நாள் (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை**

அதிகாலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, விசேஷசாந்தி, யாகபூஜை, ஹோமம், மஹா பூர்ணாகுதி, தீபாராதனை, வேதஸ்தோத்திர பாராயணம், திருமுறை பாராயணம், அந்தர்பலி, பகிர்பலி, யாத்திராதானம் நடைபெற்று கும்பவீதியுலா, தூபியபிஷேகம், தொடர்ந்து காலை 8.00 மணி முதல் 9.00 மணிவரையுள்ள கன்னி லக்கின முகூர்த்தத்தில் விநாயகர், நாகதம்பிரான், வைரவர், காத்தவராயர், முதலான பரிவார மூர்த்திகளுக்கும், மூல மூர்த்தியாக விளங்கும் அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மனுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து தசதர்சனம், கோபூஜை, ஆசார்ய சம்பாவனை, எஜமான் ஆசீர்வாதம், மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

மாலை 3.00 மணிக்கு விசேட பூஜை நடைபெற்று மூலமூர்த்தி அருள்மிகு பூர்வீக கண்ணகை அம்மன் திருவீதி வலம் வந்து, திருக்காட்சி நடைபெறும்.

## கும்பாபிஷேக குருமார்

**சர்வசாதகாச்சாரியார்**
சிவஸ்ரீ வரத சிவரூபக் குருக்கள்

**ஆலய அர்ச்சகர்**
பிரம்மஸ்ரீ சி. குகநேஸ்வர சர்மா

**கும்பாபிஷேக பிரதமகுரு**
"நாகதம்பிரான் உபாசகர்"
**சிவஸ்ரீ க. சிவசண்முகக் குருக்கள்**
(ஆலய பரம்பரை பிரதமகுரு)

**யாகசம்ரட்சகர்கள்**
பிரம்மஸ்ரீ சி. குகநேஸ்வர சர்மா
(ஆலய பூசகர்)
பிரம்மஸ்ரீ ச. ஜெகநாத சர்மா
(கொக்குவில்)
பிரம்மஸ்ரீ வை. சரவணன் சர்மா
(கொக்குவில்)

**ஆலய புனர்நிர்மாணம்**
தெய்வேந்திரம் ஈஸ்வரன்
(ஏழாலை கிழக்கு, ஏழாலை)

**மங்கல வாத்தியம்**
இராமமூர்த்தி சிவகுமார் குழுவினர்
(வழுக்கம்பாறை, தொல்புரம்)

**பூமாலை அலங்காரம்**
ந. விஜயரட்ண ஐயர்

**யாக அமைப்பு**
மாதனை ஸ்ரீ காளி அம்மன் ஆலயம்
(மாதனை, பருத்தித்துறை)

**ஒலி, ஒளி அமைப்பு**
நாகேஸ்வரா சவுண்ட்
(நாகர் கோவில்)

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற இருப்பதால் மண்டலாபிஷேகம் செய்ய விரும்பும் அடியார்கள் ஆலய நிர்வாகி / பொங்கல் உற்சவ காலப் பூசகர் திரு. வ. பத்மநாதன் அவர்களுடன் ஆலயத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி மூலம் தொடர்புகளுக்கு - 0777 589873 / 0771 599322

நாகர் கோவில் கண்ணகை
அம்மன் தேவஸ்தானம்
நாகர் கோவில்.
22.07.2014

குறிப்பு: கும்பாபிஷேகத்திற்குத் தேவையான நிதி உதவி, அபிஷேக திரவியங்கள், இளநீர், பால், தயிர், தேன், நெய், அரிசி, தேங்காய், எண்ணெய், பூமாலைகள், பூமாலைகள் மற்றும் அன்னதானத்திற்குரிய அரிசி, மரக்கறி வகைகள் கொண்டு வந்து கொடுத்து இவ் விழா சிறப்பாக நடைபெற உதவுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
ஆலய பரம்பரை தர்மகர்த்தா
மு. சதாசிவம் வல்லிபுரநாதர் அவர்களின்
வழித்தோன்றல்களும்
நாகர் கோவில் கூடாரப்பு
கிராம வாசிகளும்

Harikanan, Jaffna



உ

## நாகர்கோவில் கண்ணகை அம்மன்

# குடமுழுக்கு விழா

திருவருளை முன்னிட்டு நிகழும் காலயுக்தி வருடம் சித்திரை மாதம் 14ம் நாள் (27-4-78) வியாழக்கிழமை காலை 10மணி 05நிமிஷம் தொடக்கம் 11மணி 10நிமிஷம் வரையில் உள்ள மூலநட்சத்திரத்துடன் கூடிய மிதுனலக்கின சுப முகூர்த்தத்தில் விநாயகப் பெருமான், அம்பாள் ஆகியோருக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

13ம் திகதி புதன்கிழமை மாலை 3மணி தொடக்கம் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகும். அத்தருணம் அன்பர்கள் அடியார்கள் அனைவரும் வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்வீர்களாக.

குறிப்பு:- அபிஷேகத்திற்குரிய பால், பழம், கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்தி. பட்டு இவைகளை உபகரித்தல் பெரும் புண்ணியமாகும்.

கும்பாபிஷேகப் பிரதமகுரு:
கிரியாகலாப முத்தாமணி பிரம்ம ஸ்ரீ ந. தேவராசாக் குருக்கள்

இங்ஙனம்
ஆலயபரிபாலன கர்த்தா
மு. ச வல்லிபுரநாதரும்
நாகர்கோவில்-குடாரப்பு
கிராமவாசிகளும்

20-4-78
நாகர் கோவில்

6k



Harikanan, Jaffna.